



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 239 11.04.2026 சனிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 239 Saturday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


# தமிழ்நாடு தலை குனியாது!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஏப்.11:**

தமிழ்நாடு ஒருபோதும் தலை குனியாது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழுக்கு அளித்த நேர்காணலில், திமுகவின் முன்னோடி நலத் திட்டங்கள், வலுவான கூட்டணிக் கட்டமைப்பு மற்றும் வலிமையான சித்தாந்தம் ஆகியவை இணைந்து 'திராவிட மாடல் 2.0' ஆட்சியில் மக்களுக்கான அங்கீகாரத்தை நிச்சயம் உறுதி செய்யும் என்றும் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டார்.

மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறீர்கள். மக்களின் மனநிலை எப்படி இருக்கிறது? என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், திராவிட மாடல் 2.0 அரசு மீண்டும் அமைய வேண்டும் என்பதே தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களின் மேலோங்கிய உணர்வாக இருக்கிறது. எண்ணற்ற நலத் திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழகத்தை ஒரு 'சூப்பர் ஸ்டார்' மாநிலமாக உயர்த்தியிருக்கும் திராவிட மாடலால் மட்டுமே, தொடர்ந்து இந்த மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் செல்ல முடியும் என்ற உறுதியான நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது என்றார்.

பேரறிஞர் அண்ணா கூறியது போல, நாங்கள் எப்போதும் மக்களுடனேயே இருந்து, அவர்களுக்காகவே அயராது உழைத்து வருகிறோம். அதனால்தான் மக்கள் எங்கள் மீது அளவற்ற நம்பிக்கையையும் பாசத்தையும் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதே தவிர, சற்றும் குறையவில்லை. நான் மிகவும் வியக்கும் விஷயம் என்னவென்றால், திராவிட மாடல் அரசின் திட்டங்களை நான் பட்டியலிட்டுச் சொல்லத் தொடங்குவதற்கு முன்பாகவே, கூட்டத்தில் இருப்பவர்கள் தாங்களாகவே அந்தத் திட்டங்களை வரிசைப்படுத்திச் சொல்கிறார்கள். இது, திமுக அரசுக்கு சாதகமான அலை வீசி வருவதற்கான தெளிவான அறிகுறியாகும் என்றார் ஸ்டாலின்.

தமிழ்நாட்டுக்குத் தேவையான நிதிகள் தொடர்ந்து கிடைக்காமலும், பல்கலைக்கழகங்கள் துணை வேந்தர்கள் இல்லாமலும் செயல்பட்டு வருவதற்கான தீர்வு என்ன? என்ற மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், "நாங்கள் எங்களின் நியாயமான உரிமைகளுக்காகப் போராடி வருகிறோம். ஆனால், அவர்கள் ஒடுக்குமுறை மூலம் எங்களை அடிபணியச் செய்ய முயல்கிறார்கள்.

எந்த வகையான ஒடுக்குமுறைக்கும் தமிழ்நாடு ஒருபோதும் தலை குனியாது.

பாசிச சக்திகளைத் தோற்கடிப்பதற்காக நாங்கள் முன்னெடுக்கும் சட்டப் போராட்டங்களும், மக்கள் மத்தியிலான போராட்டங்களும் தொடர்ந்து நடைபெறும். தமிழ்நாடு நிச்சயம் வெற்றி பெறும் என்றார்.

### மெட்ரோவில் பயணம் செய்து வாக்கு சேகரித்த முதலமைச்சர்



தமிழக சட்டசபை தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சியினர் பிரசாரம், வாக்குசேகரிப்பு உள்பட பல்வேறு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறது.

இந்நிலையில், திமுக தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று சென்னை மெட்ரோ ரெயிலில் பயணித்து வாக்கு சேகரித்தார். சென்னை சென்டிரலில் இருந்து தேனாம்பேட்டை வரை மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தார். அப்போது அரசின் நலத்திட்டங்கள் குறித்து பயணிகளுடன் கலந்துரையாடி, வாக்கு சேகரித்தார். பின்னர் மெட்ரோ வளாகத்தில் முதல்-அமைச்சருடன் பயணிகள் கலந்துரையாடி செல்பி எடுத்துக் கொண்டனர்.

இதனிடையே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று மாலை தஞ்சையில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பங்கேற்க உள்ளார். அவர் தஞ்சையில் உள்ள 8 தொகுதிகளை சேர்ந்த திமுக, கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

### இன்றைய நாள்

சனிக்கிழமை
(11-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-28
பிறை: தேய்பிறை
திதி
நவமி இரவு 9.58 வரை
பிறகு தசமி
நட்சத்திரம்:
உத்திராடம் காலை 11.13 வரை பிறகு திருவோணம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00 – 10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30 –3.00 மணி
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி
மாலை 5-6 மணி

| | |
|---|---|
| மேஷம் | பெருமை |
| ரிஷபம் | போட்டி |
| மிதுனம் | உதவி |
| கடகம் | நலம் |
| சிம்மம் | நன்மை |
| கன்னி | பக்தி |
| துலாம் | முயற்சி |
| விருச்சிகம் | ஒய்வு |
| தனுசு | பணிவு |
| மகரம் | தாமதம் |
| கும்பம் | மேன்மை |
| மீனம் | ஆதரவு |

## ஜன நாயகன் முழுப் படமும் சட்டவிரோதமாக இணையத்தில் வெளியானதால் படக்குழுவினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

**சென்னை, ஏப்.11:**

ஜன நாயகன் திரைப்படம் பொங்கலையொட்டி ஜனவரி 9 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும், சில காட்சிகள் மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் இருப்பதாகக் கூறி சான்றிதழ் வழங்குவதை தணிக்கை வாரியம் நிறுத்தி வைத்தது.

தொடர்ந்து, நடைபெற்ற வழக்கு விசாரணைகளில் இப்படத்தை மறுதணிக்கை செய்ய நீதிமன்றம் உத்தரவு அளித்தது. இதனால், ஜன நாயகன் வெளியீட்டில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டதுடன் வணிக ரீதியாக சில பின்னடைவுகளும் ஏற்பட்டன.

தற்போது,மறுதணிக்கைக்கான திரைப்படத்தை மத்திய சான்றிதழ் வாரியம் பார்த்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும், அரசியல் தொடர்பான காட்சிகள் இடம்பெற்றுள்ளதால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் நிலையில், இந்திய தேர்தல் ஆணையம் படத்தை பார்த்து வெளியீடு தொடர்பாக முடிவெடுக்க பரிந்துரைக்கப்பட்டது.

இதன்காரணமாக, தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் முடிவடைந்தவுடன் மே இரண்டாவது வாரத்தில் ஜன நாயகன் படத்தை வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், வியாழக்கிழமை மாலை ஜன நாயகன் திரைப்படத்தின் சில காட்சிகள் இணையத்தில் சட்டவிரோதமாக மர்ம நபர்களால் வெளியிடப்பட்டது.

## குடியரசு துணைத்தலைவர் சி. பி. ராதாகிருஷ்ணன் ஏப். 19,20-இல் இலங்கைக்கு அரசுமுறை பயணம்

**புதுடில்லி, ஏப்.11:**

இந்திய குடியரசு துணைத்தலைவா சி.பி. ராதாகிருஷ்ணன் இரண்டு நாள்கள் அரசுமுறைப் பயணமாக இலங்கைக்கு வரும் 19, 20 ஆகிய நாள்களில் பயணம் மேற்கொள்ளவுள்ளாா். இது தொடா்பான அதிகாரபூா்வ தகவலை இலங்கை அதிபரின் ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியது.

இந்திய குடியரசு துணைத்தலைவராக சி.பி. ராதாகிருஷ்ணன் பதவியேற்ற பிறகு இலங்கைக்கு அவா் முதல் முறையாக பயணம் மேற்கொள்ளவிருக்கிறாா். அவரது பயணத்திட்டத்தை இறுதிப்படுத்துவது தொடா்பாக கொழும்பில் அதிபரின் தலைமை அலுவல் அதிகாரி பிரபாத் சந்திரகீா்த்தி, இந்திய துணைத்தூதா் சத்யாஞ்சல் பாண்டே ஆகியோா் இலங்கை அதிபா் மாளிகையில் அண்மையில் ஆலோசனை மேற்கொண்டனா். இந்த சந்திப்பின்போது கொழும்பில் உள்ள இந்திய தூதரக வளா்ச்சி ஒத்துழைப்புப் பிரிவு ஆலோசகா் மைத்திரி குல்கா்னி, அரசியல் ஆலோசகா டாக்டா் சி. ராம்பாபு, இலங்கை அதிபரின் மூத்த கூடுதல் செயலா் ரோஷன் கமேகே ஆகியோரும் உடனிருந்தனா்.



அப்போது, இந்திய குடியரசு துணைத்தலைவரின் வருகை தொடா்பான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பு, அவரது சந்திப்பின்போது இருதரப்பிலும் பரஸ்பரம் நடத்த வேண்டிய பேச்சுவாா்த்தைக்கான தலைப்புகள் உள்ளிட்டவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. மேலும், இந்திய நிதியுதவியுடன் கொழும்பில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள், எதிா்காலத்தில் தொடங்கப்படவுள்ள திட்டங்கள் தொடா்பாகவும் இரு நாட்டு அதிகாரிகள் விவாதித்தனா்.

கொழும்பு வருகையின்போது இலங்கை அதிபா் அநுர குமார திஸ்ஸநாயக்க, பிரதமா் டாக்டா் ஹரிணி அமரசூரியா மற்றும் அந்நாட்டின் முக்கிய தலைவா்களை இந்திய குடியரசு துணைத்தலைவா் சந்தித்துப்பேசுவாா் என்றும் இலங்கை அதிபரின் ஊடகப்பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனா்.

## நாகர்கோவிலில் பிரதமர் மோடி ரோடு ஷோ: நயினார் நாகேந்திரன் தகவல்

**கன்னியாகுமரி, ஏப்.11:**



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் செய்தியாளர்களை சந்தித்த தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியதாவது:

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பிலிருந்து வடசேரி எம்.ஜி.ஆர். சிலை வரை ரோடு ஷோ மூலம் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இதற்கான நாள், நேரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த எழுச்சிமிகு பயணத்தில் கூட்டணி கட்சி தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் பெருமளவில் பங்கேற்பார்கள். இந்தத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 180-க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும்.

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் தென் மாவட்ட சுற்றுப்பயணத்தால் அரசியலில் புதிதாக எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது பிரசாரத்தில் பா.ஜ.க.வை மட்டுமே அதிகம் விமர்சிக்கிறார். இது பா.ஜ.க.வின் வளர்ச்சியைக் கண்டு அவர் கொண்டுள்ள பயத்தையே காட்டுகிறது.

மெட்ரோ ரெயில் திட்டம் குறித்து பேசிய அவர், "தமிழக அரசு முறையான விரிவான திட்ட அறிக்கையைக் கொடுக்காததே மெட்ரோ ரெயில் திட்டம் தாமதமாகக் காரணம். சாத்தான்குளம் வழக்கில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பு சட்டப்படியானது; அதற்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த பேட்டியின்போது நாகர்கோவில் தொகுதி வேட்பாளர் எம்.ஆர். காந்தி, மாவட்ட தலைவர் கோபகுமார், மாநில செயற்குழு உறுப்பினர் உமாரதிராஜன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு: சட்டப்பேரவை தேர்தல் களத்தில் 4500 வேட்பாளர்கள்

**சென்னை, ஏப்.11:**

சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் இறுதி வேட்பாளர்களின் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. தமிழகம் முழுவதும் உள்ள 234 தொகுதிகளில் சுமார் 4,500 வேட்பாளர்கள் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த மார்ச் 15-ம் தேதி அறிவிக்கப்பட்டது. மார்ச் 30-ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கி ஏப்.6-ம் தேதி நிறைவடைந்தது. 234 தொகுதிகளிலும் மொத்தம் 7,599 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 7-ம் தேதி வேட்புமனுக்கள் பரிசீலனை நடைபெற்றது. இதில் 5,139 மனுக்கள் ஏற்கப்பட்டன. முறையாக பூர்த்தி செய்யப்படாத 2 460 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மனுக்களை திரும்பப் பெற நேற்று மாலை 3 மணி வரை அவகாசம் வழங்கப்பட்டது. இதில் 500-க்கும் மேற்பட்ட வேட்புமனுக்கள் திரும்பப் பெறப்பட்டன.

இதையடுத்து, நேற்று மாலை இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. 234 தொகுதிகளிலும் 4,500-க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது. இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியானதைத் தொடர்ந்து நேற்று மாலையே சுயேச்சை வேட்பாளர்களுக்கான சின்னங்கள் ஒதுக்கப்பட்டன.

அந்தந்த தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் உறுதியாகியுள்ள நிலையில், அத்தொகுதிகளுக்கான தபால் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் இன்று தொடங்குகின்றன. அடுத்த சில தினங்களில் தேர்தல் அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு அடுத்தகட்ட பயிற்சி வழங்கப்பட உள்ளது. அப்போது அவர்களிடம் தபால் வாக்குச் சீட்டுகள் வழங்கப்பட உள்ளன.

அதனைத் தொடர்ந்து, வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, தேவையான வாக்குப்பதிவு இயந்திரங்கள் கணக்கிடப்பட உள்ளன. வாக்குப்பதிவு இயந்திரங்களில் ஒவ்வொன்றிலும் 16 வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னங்கள் இடம் பெறும். வேட்பாளர்களின் எண்ணிக்கை அதற்கு மேல் இருந்தால் கூடுதலாக ஒரு வாக்குப்பதிவு இயந்திரம் இணைக்கப்படும். அதிகபட்சமாக 4 அலகுகளை சேர்க்க முடியும். அவற்றில் 63 வேட்பாளர்கள் மற்றும் ஒரு நோட்டா பொத்தான் இடம்பெறும்.

ஏற்கெனவே, தொகுதி வாரியாக வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு இயந்திரங்கள், விவிபாட் இயந்திரங்கள் பிரித்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் சின்னங்களை பொருத்தும் பணிகள் ஓரிரு தினங்களில் தொடங்க உள்ளன. அதற்கான பெயர், சின்னங்களை அச்சிடும் பணிகளும் இன்று தொடங்குகின்றன.

இந்த தேர்தலில் 2,80,30,658 ஆண், 2,93,04,905 பெண், 7,728 மூன்றாம் பாலினத்தினர் என மொத்தம் 5,73,43,291 பேர் வாக்களிக்க உள்ளனர். இவர்களுக்கு வீடு வீடாக சென்று வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வாக்காளர் சீட்டு விநியோகம் செய்யும் பணி இன்று தொடங்குகிறது. 17-ம் தேதிக்குள் இப்பணிகளை முடிக்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அறிவுறுத்தியுள்ளார்.

இத்தேர்தலில் சுமார் 75 ஆயிரம் வாக்குச்சாவடிகள் தயார்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் 5,938 வாக்குச்சாவடிகள் பதற்றமான மற்றும் மிகவும் பதற்றமானவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. தேர்தல் பாதுகாப்புப் பணியில் 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணை ராணுவப்படையினர் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியான நிலையில், தமிழகம் முழுவதும் நியமிக்கப்பட்டுள்ள 151 செலவின பார்வையாளர்களும், வேட்பாளர்களின் பிரச்சார செலவினங்களை வீடியோவில் பதிவு செய்து, செலவினத்தை மதிப்பிட்டு வருகின்றனர். அவற்றை, வேட்பாளர்களின் செலவு கணக்கில் சேர்க்கும் பணிகளை இன்று முதல் தீவிரப்படுத்த இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.



# வாலிபரை கொன்ற வழக்கில் 9 பேருக்கு ஆயுள் தண்டனை



**சேலம், ஏப்.11:**

சேலத்தில் கேரம் போர்டு விளையாடியபோது ஏற்பட்ட தகராறில் வாலிபரை கொன்ற வழக்கில் 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து சேலம் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சேலம் அன்னதானப்பட்டி வள்ளுவர்நகர் 5வது தெருவை சேர்ந்தவர் மனோஜ்குமார் (25). கடந்த 2015ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ம் தேதி மனோஜ்குமார் அன்னதானப்பட்டி நான்கு ரோடு பகுதியில் உள்ள கேரம்போர்டு கிளப்பில் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது மனோஜ்குமாருக்கும், அங்கிருந்த பாஷா (எ) சையத் காதர் பாஷா(35), பிரகாஷ் என்ற பாம்பு பிரகாஷ் (34) ஆகியோருக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் மனோஜ்குமாரை தாக்கினர்.

இதையடுத்து தனது வீட்டுக்கு சென்ற மனோஜ்குமார், இதுபற்றி தனது தம்பி விக்னேஷிடம் தெரிவித்தார். மணியனூரில் உள்ள எஸ்ஆர்எம் தோட்டம் பாண்டு நகரில் காலி இடத்தில் சையத் காதர் பாஷா, பிரகாஷ் ஆகியோர் இருப்பதாக விக்னேஷிற்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அன்று இரவு 10மணியளவில் விக்னேஷ் தனது நண்பர்களுடன் அங்கு சென்றார். அங்கிருந்த சையத் காதர் பாஷாவிடம் எதற்காக எனது அண்ணனை தாக்கினீர்கள் என கேட்டுள்ளார். அப்போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது. அந்த சமயத்தில் சையத் காதர் பாஷா தரப்பினர் விக்னேஷுடன் சென்ற மனோஜ்குமாரை சரமாரியாக தாக்கினர்.

இதில் சம்பவ இடத்திலேயே மனோஜ்குமார் உயிரிழந்தார். இதுபற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து பாஷா (எ) சையத் காதர் பாஷா(45), பிரகாஷ் (எ) பாம்பு பிரகாஷ்(44), பெரியசாமி (44), வீச்சுகுமார் (எ) குமார்(61), மதுராஜ்(48), நந்து (எ) நந்தகுமார்(48), அப்பளமணிகண்டன் (எ) மணிகண்டன்(50), மதுரக்கார சரவணன்(எ) சரவணன்(61), வெள்ளையன் மணி (எ) மணிகண்டன்(52) ஆகிய 9பேரையும் கைது செய்தனர். சேலம் எஸ்சிஎஸ்டி நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜெயசிங் நேற்று, 9 பேரும் குற்றவாளிகள் என தீர்ப்பு கூறினார்.

மேலும், 9 பேருக்கும் ஆயுள் தண்டனையும் ரூ.11 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி உத்தரவிட்டார். தண்டனை பெற்ற அனைவரும் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

# சென்னை மெட்ரோ ரயிலில் முதல்வர் ஸ்டாலின் ஓட்டு சேகரிப்பு



**சென்னை, ஏப்.11:**

சென்னை மெட்ரோ ரயிலில் பயணித்து முதல்வர் ஸ்டாலின் பயணிகளிடம் ஓட்டு சேகரித்தார்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கான பிரசாரத்தில் அனைத்து கட்சியினரும் தீவிரமாக ஈடுபட்டு வரும் நிலையில், முதல்வர் ஸ்டாலினும் ஒவ்வொரு மாவட்டத்திற்காக சென்று பிரசாரம் செய்து வருகிறார். அந்த வகையில், சென்னை மெட்ரோ ரயிலில் பயணித்து முதல்வர் ஸ்டாலின் பொதுமக்களிடம் ஓட்டு சேகரித்தார்.

அப்போது, பயணிகளிடம் நலம் விசாரித்த ஸ்டாலின் திமுக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஓட்டு அளித்து ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொண்டார். சிலர் அவருடன் கைகுலுக்கி செல்பி எடுத்துக் கொண்டனர். அரசின் நலத்திட்டங்கள் குறித்து பயணிகளுடன் கலந்துரையாடினார்.

சில தினங்களாக நடை பயிற்சியின் போது மக்களை சந்தித்தும், சாலையோர டீக்கடையில் மக்களோடு மக்களாக அமர்ந்து டீ குடித்தும் ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

தேர்தலுக்கு இன்னும் 13 நாட்கள் மட்டுமே இருப்பதால் அரசியல் களம் சூடுபிடித்து உள்ளது.

# காரைக்குடி பிரச்சாரத்தில் பேசாமல் புறப்பட்டார் விஜய்: தாமதமாக வந்ததால் அனுமதி மறுப்பு



**காரைக்குடி,ஏப்.11:**

காரைக்குடி தொகுதியில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை கடந்து, பிரச்சாரம் நடக்கும் இடத்துக்கு வந்ததால், தவெக தலைவர் விஜய் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் காரைக்குடியில் விஜய் பேசாமல் திரும்பிச் சென்றார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தொகுதியில் இன்று விஜய் பிரச்சாரம் செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக காவல் துறை அனுமதியும் அளித்திருந்தது. காரைக்குடியில் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 4 வேட்பாளர்களுக்கும் ஆதரவாக விஜய் நேற்று வாக்கு சேகரிப்பதாக இருந்தது. இதற்காக சென்னையில் இருந்து தனி விமானம் மூலமாக மதுரை வந்த விஜய், அங்கிருந்து தனது வாகனம் மூலமாக காரைக்குடிக்கு புறப்பட்டார்.


மதுரயிலிருந்து வரும் வழியில் தவெகவினர் திரண்டதால், அவர்களுக்கு கையசைத்தபடி விஜய்யின் வாகனம் ஆமை வேகத்தில் பயணித்தது. இடையில் திடீரென பிரச்சார வாகனத்தில் இருந்து இறங்கிய விஜய், அவருக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் ஏறி பயணிக்க தொடங்கினார். இதனால் அவர் காரைக்குடிக்கு வருவதற்கு மிகவும் தாமதமானது.

மதுரையில் இருந்து காரைக்குடி வருவதற்கு உள்ள 90 கிலோ மீட்டர் தூரத்தை கடக்க விஜய்யின் வாகனம் 4 மணி நேரத்தும் மேல் எடுத்துக்கொண்டது. இதனால் விஜய், காரைக்குடிக்கு மதியம் 2.30 மணிக்கு மேல்தான் வந்தார். விஜய் காரைக்குடியில் பிரச்சாரம் செய்ய நண்பகல் 12 மணி முதல் மதியம் 2.30 மணி வரை அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

காவல் துறை அனுமதித்திருந்த நேரத்தை தாண்டி காரைக்குடிக்கு விஜய் வந்ததால், அவருக்கு பிரச்சாரம் மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டது.

இதனால், பிரச்சாரம் நடக்கும் இடத்தில் கூடியிருந்த தொண்டர்களிடம் பேசாமலேயே விஜய் அங்கிருந்து புறப்பட்டார். மேலும், காரைக்குடியில் ரோடு ஷோ மேற்கொண்ட விஜய், தவெக வேட்பாளர் பிரபுவுக்கு வாக்களிக்கும்படி சைகையின் மூலம் தெரிவித்துவிட்டு புறப்பட்டார்.

# மீன்பிடி வலையில் சிக்கி படுகாயமடைந்த மலைப்பாம்பு.! அறுவை சிகிச்சை செய்து காப்பாற்றிய நெல்லை மருத்துவர்கள்



நெல்லையில் மீன்பிடி வலையில் சிக்கி படுகாயமடைந்து உயிருக்கும் போராடிய மலைப்பாம்பு ஒன்றிற்கு நெல்லை கால்நடை துறை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நியதில் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, மருத்துவர்கள் அதன் உயிரை காப்பாற்றியுள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

# கும்பமேளா அழகி மோனாலிசா கணவர் மீது போக்சோ வழக்கு!




'கும்பமேளா அழகி' மோனாலிசா தனது காதலரை சமீபத்தில் திருமணம் செய்துகொண்டார். அவரது கணவர் ஒரு முஸ்லீம் என்பதால், இது லவ் ஜிகாத் என பலரும் விமர்சித்திருந்தனர். அதற்கு இது லவ் ஜிகாத் இல்லை, எனது விருப்பப்படியே திருமணம் நடைபெற்றது என மோனாலிசா விளக்கம் அளித்திருந்தார்.

இந்நிலையில் அவரது கணவர் ஃபர்மான் மீது போக்சோ வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மத்தியப் பிரதேசத்தின் மகேஷ்வர் காவல் நிலையத்தில் ஃபர்மான் கான் மீது போக்சோ சட்டம், பாரதிய நியாய சன்ஹிதா மற்றும் எஸ்சி/எஸ்டி (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழ் எஃப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேசிய பழங்குடியினர் ஆணையம் நடத்திய விசாரணையில், திருமணத்தின் போது மோனாலிசாவிற்கு 16 வயதுதான் என தெரியவந்துள்ளது. இதனைத்தொடர்ந்து அவர்மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மோனாலிசா டிசம்பர் 30, 2009 அன்று பிறந்தவர் என்பதை மத்தியப் பிரதேசத்தின் மகேஷ்வர் அரசு மருத்துவமனை பதிவுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

மோனாலிசா கடந்த மார்ச் 11, 2026 அன்று ஃபர்மான் கானை கேரளாவில் உள்ள ஒரு கோவிலில் திருமணம் செய்து கொண்டார்.

# பிரசார கூட்டத்திற்குள் நுழைந்த சவ ஊர்வலம்: வெற்றி உறுதி என அறிவித்த பிரேமலதா



**குடியாத்தம், ஏப்.11:**

குடியாத்தத்தில், நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் பிரேமலதா பேசும்போது அந்த வழியாக சவஊர்வலம் சென்றது. நல்ல சகுனம் என கையெடுத்து வணங்கிய அவர், குடியாத்தத்தில் வெற்றி உறுதி செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

தி.மு.க., கூட்டணியில் தே.மு.தி.க., சார்பில் வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் பிரதாப்பை ஆதரித்து தே.மு.தி.க., பொதுச்செயலர் பிரேமலதா விஜயகாந்த் குடியாத்தம் பழைய பேருந்து நிலையத்தில் நேற்று இரவு பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:

எனது சொந்த ஊரான குடியாத்தம் வந்தவுடனே எனக்கு புது புத்துணர்ச்சி வருகிறது. என்னோட பூர்வீகம் அருகில் உள்ள செம்பேடு கிராமம் தான். எனது சொந்த மண்ணில் உங்களை பார்ப்பது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. விஜயகாந்த் இந்த ஊர் மாப்பிள்ளை. குடியாத்தம் தொகுதி மிக முக்கியமான தொகுதி காமராஜருக்கு வெற்றி தந்த தொகுதி. தேசிய கொடியை உருவாக்கிய புனிதமான மண். இந்த நேரத்தில் மண்ணில் மகளாக பெருமையாக சொல்கிறேன்.

இங்கு யார் போட்டியிட்டாலும் கேப்டன் தான் களத்தில் இருக்கிறார் என நினைத்து வாக்களிக்க வேண்டும். நிச்சயம் குடியாத்தம் தொகுதியில் வெற்றி பெற்று உங்களுக்கு நன்றி சொல்ல வருவேன்.

தே.மு.தி.க., கூட்டத்திற்குள் நுழைந்த சவ ஊர்வலம் வெற்றி உறுதி செய்யப்பட்டதாக பிரேமலதா அறிவிப்பு தே.மு.தி.க., கூட்டத்திற்குள் நுழைந்த சவ ஊர்வலம் வெற்றி உறுதி செய்யப்பட்டதாக பிரேமலதா அறிவிப்பு

இதுவரை இல்லாத அளவில் தமிழகத்தில் ஐந்து முனை போட்டி நடைபெறுகிறது. எத்தனை அணி இருந்தாலும் நமது கூட்டணி வெற்றி பெற்று அண்ணன் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் ஏழாவது முறையாக தி.மு.க., ஆட்சி அமைக்கும்.

தே.மு.தி.க.,விற்கு மட்டுமல்ல தி.மு.க., வி.சி.க., காங்கிரஸ் கட்சிக்காகவும் பிரசாரம் செய்து வருகிறேன். அண்ணா சொன்னது போல கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்ட கட்சி இது இதை தான் கேப்டன் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

இங்கு உள்ள அனைத்து ஊர்களும் எனக்கு நன்றாக தெரியும். எந்த பழசையும் மறப்பவள் கிடையாது .இவ்வாறு அவர் பேசினார்.

பிரேமலதா பேசிக் கொண்டிருக்கும்போது'இடையில் சவ ஊர்வலம் வந்தது. அதை பார்த்த பிரேமலதா தனது பேச்சை நிறுத்தி தொண்டர்களை அமைதியாக இருக்கும்படியும் சவ ஊர்வலத்திற்கு வழி விடும்படி தெரிவித்தார்.அதோடு தன்னைக் கடந்து சென்ற சவ ஊர்வலத்திற்கு கையெடுத்து கும்பிட்டு மரியாதை செலுத்தினார்.பொதுவாக நல்ல விஷயத்திற்கு செல்லும்போது சவ ஊர்வலம் வந்தால் நல்ல சகுனம் என சொல்வார்கள். அந்த வகையில் இப்போது குடியாத்தத்தில் வெற்றி உறுதி என கூறினார்.

# சி.வி.சண்முகம் மீதான அவதூறு வழக்குகள் விசாரணை ஜூன் 8-க்கு ஒத்திவைப்பு



விழுப்புரம்: அதிமுக முன்னாள் அமைச்சரும், மாநிலங்களவை உறுப்பினருமான சி.வி.சண்முகம் மீதான அவதூறு வழக்குகள் விசாரணையை ஜூன் மாதம் 8 ஆம் தேதிக்கு ஒத்திவைத்து விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், ஆரோவில் பேருந்து நிலையம் எதிரில் 2023, மார்ச் 10-ஆம் தேதியும், கோட்டக்குப்பம் நகராட்சித் திடலில் 2023, மே 1-ஆம் தேதியும் அதிமுக சார்பில் கண்டன பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

இந்த கூட்டங்களில் பங்கேற்ற அதிமுக முன்னாள் அமைச்சரும், மாநிலங்களவை உறுப்பினருமான சி.வி.சண்முகம், தமிழக அரசையும், முதல்வா் மு.க.ஸ்டாலினையும் அவதூறாக பேசியதாகக் கூறப்படுகிறது.

இதுதொடாபாக, சி.வி. சண்முகம் மீது விழுப்புரம் முதன்மை மாவட்ட அமா்வு நீதிமன்றத்தில் அரசு வழக்குரைஞா் சுப்ரமணியம் தனித்தனி அவதூறு வழக்குகளைத் தொடுத்தாா்.

இந்த வழக்குகள் மீதான விசாரணைவிழுப்புரம்முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அப்போது, முன்னாள் அமைச்சா் சி.வி.சண்முகம் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவரது சாா்பில் அதிமுக வழக்குரைஞா்கள் ராதிகா செந்தில், தமிழரசன் ஆகியோா் ஆஜராகினா். மேலும் நீதிமன்றத்தில்சி.வி.சண்முகம் ஆஜா் ஆகாததற்கான காரணம் குறித்து தனி மனுவைத் தாக்கல் செய்தனர்.

அவதூறு வழக்குகளைத் தள்ளுபடி செய்யக் கோரி சென்னை உயா்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளதாகவும், இந்த மனுக்கள் மீதான உத்தரவு வரும் வரை விசாரணையை ஒத்திவைக்கக் கோரி மற்றொரு மனுவை அதிமுக வழக்குரைஞா்கள் விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனா்.

இதையடுத்து வழக்குகளை விசாரித்த முதன்மை மாவட்ட நீதிபதி (பொ) எஸ்.ராஜசிம்மவா்மன், வழக்கின் அடுத்த கட்ட விசாரணையை ஜூன் 8-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டாா்.

# சாலையில் நடந்து செல்லும் பள்ளி மாணவிகளிடம் அத்துமீறல்– என்ஜினியர் கைது

சென்னை எம்.ஜி.ஆர் நகர் அடுத்த நெசபாக்கம் அம்மன் நகர் பகுதியில் புதிய கட்டிடம் கட்டுமான பணி நடந்து வருகிறது.

இங்கு என்ஜினியர் இளங்கோவன்மேற்பார்வையில் கட்டிட தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்வழியே மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபர் ஒருவர் பள்ளி முடிந்து வீடு திரும்பும் மாணவிகள் மற்றும் பெண்களை வழிமறித்து சில்மிஷத்தில் ஈடுபட்டு ஆபாச சைகை காட்டி அத்துமீறலில் ஈடுபட்டார்.

இதை கண்டு அதிர்ச்சி அடைந்த இளங்கோவன் கூச்சலிட்டபடியே அந்த வாலிபரை பிடிக்க விரட்டியதால் ஆத்திரமடைந்த மர்ம வாலிபர் தகாத வார்த்தைகளால் பேசி இளங்கோவனுக்கு மிரட்டல் விடுத்தபடியே அங்கிருந்து மின்னல் வேகத்தில் தப்பி சென்றுவிட்டார்.

உடனடியாக இதுகுறித்து எம்.ஜி.ஆர் நகர் போலீசில் புகார் அளிக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் சீனிவாசன் மற்றும் போலீசார் விரைந்து வந்து அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவு காட்சிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் பதிவு எண்ணை வைத்து நடத்திய விசாரணையில் பெண்களிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு தப்பியது கொளத்தூர் பகுதியை சேர்ந்த சாப்ட்வேர் என்ஜினியரான தினேஷ்குமார் (35)என்பது தெரிந்தது. அவரை பெண் வன்கொடுமை உள்ளிட்ட 4பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தினேஷ்குமார் பிரபல ஐ.டி நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வருகிறார். இவர் மதிய நேரத்தில் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு ஆட்கள் நடமாட்டம் இல்லாத சாலைகளில் நடந்து செல்லும் பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் இளம்பெண்களை குறி வைத்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு வருவது வழக்கம். தினேஷ்குமார் இதுவரை 25-க்கும் மேற்பட்ட பெண்களிடம் அத்துமீறலில் ஈடுபட்டு போலீசில் சிக்காமல் தப்பியுள்ளதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# மயிலாடுதுறையில் சசிகலா – ராமதாஸ் அணி 'அப்செட்' – பாமக அன்புமணி தரப்பினர் 'குஷி'



**மயிலாடுதுறை, ஏப்.11:**

மயிலாடுதுறை தொகுதியில் பாமக ராமதாஸ் அணி வேட்பாளர், மாற்று வேட்பாளர் ஆகியோரின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதால், சசிகலா கட்சியினரும், ராமதாஸ் அணியினரும் அதிர்ச்சியடைந்துள்ளனர். பாமக அன்புமணி தரப்பினர் குஷியடைந்துள்ளனர்.

மயிலாடுதுறை தொகுதியில் அதிமுக கூட்டணியில் பாமக சார்பில் சித்தமல்லி பழனிச்சாமி போட்டியிடுகிறார். இங்கு சசிகலா கட்சி சார்பில் சுதாகர் என்பவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார்.

அதற்கு அடுத்த நாள், சசிகலா கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள பாமக நிறுவனர் ராமதாஸ், அதே மயிலாடுதுறை தொகுதியில் மாவட்டச் செயலாளர் பாக்கம் சக்திவேல் என்பவரை வேட்பாளராக றிவித்தார். ஒரே கூட்டணியில் உள்ள இருவரும் தனித்தனியாக வேட்பாளர்களை அறிவித்ததால், அக்கட்சிகளின் நிர்வாகிகள் குழப்பமடைந்தனர்.

இதையடுத்து இரு கட்சியினரும் பேசி, இறுதியில் பாமக ராமதாஸ் அணி சார்பில் பாக்கம் சக்திவேலும், மாற்று வேட்பாளராக அவரது மனைவி சுகுணாவும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், கடந்த 7-ம் தேதி நடைபெற்ற வேட்பு மனு பரிசீலனையின்போது பாமக ராமதாஸ் அணி வேட்பாளர் சக்திவேல், மாற்று வேட்பாளர் சுகுணா ஆகியோர் தாக்கல் செய்த பிரமாண பத்திரம் முறையாக இல்லை எனக் கூறி தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் ராமதாஸ் அணி, சசிகலா கட்சியினர் கடும் அதிருப்தி அடைந்தனர்.

இதையடுத்து, ராமதாஸ் அணியில் இருந்த வன்னியர் சங்க மாநிலச் செயலாளர் தங்க அய்யாசாமி அதிருப்தி அடைந்து, நேற்று முன்தினம் அன்புமணியை சந்தித்து அவருடன் இணைந்து கட்சிப் பணியாற்றுவதாக ஆதரவு தெரிவித்தார்.

கடந்த 2021 தேர்தலில் இந்தத் தொகுதியில் அதிமுக கூட்டணியில் போட்டியிட்ட பாமக வேட்பாளர் பழனிச்சாமி, காங்கிரஸ் வேட்பாளர் ராஜகுமாரிடம் 2,742 வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே தோல்வியை தழுவினார்.

இந்த முறை ராமதாஸ் அணி தனித்துப் போட்டியிடுவதால் இந்த முறையும் வெற்றி கைநழுவி போய்விடுமோ என அச்சத்தில் பாமக அன்புமணி அணியினர் இருந்த நிலையில், ராமதாஸ் தரப்பு வேட்பாளர்களின் மனுக்கள் தள்ளுபடியாகிவிட்டதால் குஷியடைந்துள்ளனர்.

இந்நிலையில், இந்த தொகுதியில் அறிவித்தபடி நாங்களே போட்டியிட்டிருக்கலாம் என சசிகலா கட்சியினரும், எங்களால் தான் உங்களுக்கு போட்டியிடும் வாய்ப்பு போய்விட்டது என ராமதாஸ் அணியினரும் கவலை தெரிவித்தனர்.

அதேசமயம், ராமதாஸ் அணியினரின் வாக்குகள் பாமக வேட்பாளர் பழனிச்சாமிக்கு கிடைக்குமா? என்பது பின்னர் தெரியவரும்.

# இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேர் விடுதலை!!



**ராமநாதபுரம், ஏப்.11:**

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேர் விடுதலை செய்யப்பட்டனர். பிப்ரவரி 19ம் தேதி எல்லை தாண்டி மீன்பிடித்ததாக 12 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது. 8 மீனவர்களை விடுவித்த ஊர்காவல்துறை நீதிமன்றம் 2 பேருக்கு அபராதம், இருவருக்கு 3 மாதம் சிறை தண்டனை விதித்தது.

# WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுப வரும் அனுகவும். 8668107106







# ! WANTED !

## Muslim Lady Accounts Assistant

**Qualification:** B.Com / Tally Knowledge Required

**Company:** Perfume Manufacturing Company

**Location:** Chrompet



Contact: 99401 46318


































# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588




# WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

## கவிதை அரங்கம்!





உன்னைப் பார்த்த அந்த
நொடி, காலம் தன்
ஓட்டத்தை நிறுத்திவிட்டது.

விழிகள் மோதிக்கொண்ட
போது, இதயத்தில் ஒரு
புதிய ராகம் பிறந்தது.

பேசத் துடித்த உதடுகள்,
உன் அழகைக் கண்டு
மௌனத்தில் உறைந்தன.

அறிமுகம் இல்லா
முன்னே, ஆழமான
பந்தம் ஒன்று நமக்குள்
முளைத்தது.

நீ கடந்து சென்ற
திசையில், என் சுவாசக்
காற்று உன்னைத் தேடிச்
செல்கிறது.

## வாழ்க்கை தத்துவம்...




யாரும் யாருக்காகவும்
உண்மையாக இருக்க
வேண்டிய அவசியமில்லை
தன் மனசாட்சிக்கு
உண்மையாக
இருந்தாலே போதும்

அன்று இரவெல்லாம்
பகலுக்காக காத்திருந்தேன்
உன்னை நேரில் காண்பதற்கு
இன்று பகலெல்லாம்
இரவுக்காக காத்திருக்கிறேன்
என் கனவில் காண்பதற்கு

எல்லோரிடமும் அன்பாய்
பழகுவதை விடவும் அளவோடு
பழகினால் உறவு நீடிக்கும்

## காதல் கை கூடியது!



டூ வீலரைப் பார்க் செய்துவிட்டு வீட்டினுள் நுழைந்த நந்தினியின் முகம் ஆச்சரியத்தில் விரிந்தது. என்றும் இல்லாத திருநாளாக தந்தை அன்று சீக்கிரமே ஆஃபிஸிலிருந்து திரும்பியிருந்தார் !

" வாம்மா, எங்கேம்மா போயிட்டு வரே?" தந்தை கேட்டதும் உஷாரானாள் நந்தினி.

" வந்துப்பா..என்னோட ஃப்ரெண்டு மாலதிக்கு இன்னிக்கு பர்த்டே. மால்ல இருக்கற ரெஸ்டாரெண்டுல லஞ்ச் கொடுத்தா. அதுக்குதாம்பா போயிட்டு வரேன்."

கீழ்க் கண்களால் மகள் முகத்தை ஆராய்ந்தவர் உதடுகளில் நமட்டுச் சிரிப்பு !

" அது சரி, உன் டூ வீலர் நடுவில மக்கர் பண்ணினதா? ஏன்னா நீ வேற யாரோடவோ போனத பார்த்தேன்."

நந்தினி அரண்டு போய் ஒருகணம் பேச்சற்றுப் போய் சிலையாக நின்று கொண்டிருந்தாள்.

தன் டூ வீலரை வேறு ஒருத்திக்கு கொடுத்து விட்டு சுதாகரனோடு தான் போனதை தந்தை பார்த்துவிட்டாற் போல் தெரியறது. அதனால்தான் இப்படிக் கேட்கிறார் என்பதைப் புரிந்து கொண்டாள்.

மகளின் அவஸ்தையைப் பார்த்த ராகவன், " சரி, நேராகவே விஷயத்துக்கு வர்றேன். பிள்ளையாண்டான் யாரு ? "

உடனே சுதாரித்துக் கொண்ட நந்தினி, " டாடி, பேர் சுதாகர். படிப்பு எம்.பி.ஏ. நல்ல உத்தியோகம். அம்மா இல்லை , அப்பா மட்டும்தான். நாங்க ஒருத்தரை ஒருத்தர் நேசிக்குறோம் டாடி! " ஒரு வழியாகக் கூறி முடித்தாள்.

" அம்மாடி, உன் அத்தை , அவளோட மகன் மாதவன் அவர்களை உனக்கு நியாபகம் இருக்கா ?"

பதில் கூறாமல் தலை கவிழ்ந்தபடி நின்று கொண்டிருக்க, ராகவன் தொடர்ந்தார்.

" நந்தினி, உன்னோட அத்தை கண் மூடும் முன்னால அவள் மகன் மாதவனுக்கு உன்னைக் கட்டித் தருவதாக வாக்கு கொடுத்து விட்டேன். அது உனக்குத் தெரியும்னு நினைக்கிறேன். அப்படி இருக்கும்போது நீ வேற ஒருவனை கட்டிக்கி ட்டால் அது தவறாகாதா?"

"ஸாரி டாடி, எனக்கு சின்ன வயசிலி ருந்தே மாதவனை என் சகோதரனா கத்தான் பாவிக்கிறேன். அப்படி இருக்கும்போது மாதவனை நான் எப்படி டாடி கட்டிக்கிறது..." என்றாள்.

அதே சமயம் ஒரு வேலையாக அந்தப் பக்கம் வந்த மாதவன் அப்படியே மாமா மாமியைப் பார்த்து விட்டுப் போகலாம் என்ற நினைப்பில் உள்ளே நுழைய முற்ட்டான் . பேச்சு தன்னைப் பற்றியதாக இருக்க உள்ளே நுழையாமல் நின்றபடி கேட்டான். கேட்டவனுக்குள் உற்சாகம் பீறிட்டது.

தன் தாய் இறக்கும் முன்னால் மாமாவிடம் பெற்ற வாக்குறுதி பற்றி தெரியும் மாதவனுக்கு. ஆனால் தன் ஆஃபிஸில் வேலை செய்யும் லதா என்பவளை தான் காதலிப்பதாக அம்மாவிடம் சொல்ல எண்ணிக்கொண்டிருந்தவனுக்கு அப்படிச் சொல்ல தைரியம் இல்லாமல் போனது. அதற்குள் அவனின் தாய் மரித்துப் போனாள்.

இப்போது நந்தினியே தனக்கு ஆதரவாகப் பேசினது பெரும் நிம்மதியைத் தந்தது. நெஞ்சு பூராக சந்தோஷத்துடன் வந்த சுவடு தெரியாமல் திரும்பினான் மாதவன்.

**வி.கே. லக்ஷ்மிநாராயணன்**

## தினம் ஒரு சமையல்



### வேப்பம்பூ பொரியல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சின்ன வெங்காயம் | -ஆறிலிருந்து எட்டு நம்பர் |
| மிளகாய் தூள் | -தேவையான |
| மஞ்சள் தூள் | -சிறிதளவு |
| உப்பு | -தேவையான அளவு |
| வெள்ளம் | -சிறிதளவு |
| தேங்காய் துருவல் | -சிறிதளவு |
| கடுகு உளுத்தம் பருப்பு | -சிறிதளவு |
| வரமிளகாய் | -ஒரு நம்பர் |
| கருவேப்பிலை | -சிறிதளவு |

செய்முறை:

வேப்பம்பூவை தண்ணீரில் கழுவி எடுத்துக் கொள்ளவும்



என்னை ஊற்றி கடுகு உளுத்தம் பருப்பு வர மிளகாய் சின்ன வெங்காயம் கருவேப்பிலை சேர்த்து வதக்கவும்

வெங்காயம் நன்கு வதங்கியவுடன் மஞ்சள் தூள் மிளகாய் தூள் வேப்பம்பூ சேர்த்து சிறிது தண்ணீர் தெளித்து கிளறி அதனுடன் சிறிதளவு வெள்ளை துண்டு சேர்த்து கிளறி கொள்ளவும்

அதனுடன் துருவிய தேங்காயையும் சேர்த்துக் கொள்ளவும்

இப்போது தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறி இறக்கினால் சுவையான வேப்பம்பூ பொரியல் ரெடி

அடுத்த ரெசிபியில் சந்திக்கலாம் தொடர்ந்து படித்தமைக்கு நன்றி

## அதிமதுரம் பயன்கள்



அதிமதுரம் (LICORICE) தொண்டை புண், இருமல், சளி, செரிமானக் கோளாறுகள் (அமிலத்தன்மை, வயிற்றுப் புண்) மற்றும் தோல் பிரச்சனைகளுக்குச் சிகிச்சையளிக்கப் பயன்படும் ஒரு சக்திவாய்ந்த மூலிகை. இது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது, அழற்சியைக் குறைக்கிறது மற்றும் வாய் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. இதிலுள்ள கிளைசிரைசின் (GLYCYRRHIZIN) என்ற கலவை இதற்கு இனிப்பு சுவை மற்றும் மருத்துவ குணங்களை அளிக்கிறது.

அதிமதுரத்தின் முக்கிய மருத்துவப் பயன்கள்:

சுவாச ஆரோக்கியம்: தொண்டை வலி, இருமல், நெரிசல், ஆஸ்துமா மற்றும் மூச்சுக்குழாய் அழற்சிக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது.

செரிமானம்: வயிற்றுப் புண் (GASTRIC ULCERS), நெஞ்செரிச்சல் மற்றும் அஜீரணத்தை குணப்படுத்த உதவுகிறது.

சருமப் பராமரிப்பு: கரும்புள்ளிகள், முகப்பரு, அரிக்கும் தோலழற்சி (ECZEMA) ஆகியவற்றைக் குறைத்து, சருமத்தை ஈரப்பதமாக்குகிறது.

வாய் ஆரோக்கியம்: வாய் துர்நாற்றம் மற்றும் பற்களில் ஏற்படும் சொத்தையைத் தடுக்கிறது.

ஹார்மோன் சமநிலை: மன அழுத்தத்தைக் குறைத்து, அட்ரீனல் சுரப்பியின் செயல்பாட்டை ஆதரிக்கிறது.

பயன்படுத்தும் முறை:

அதிமதுர வேரைத் தூளாக்கி, தேன் அல்லது வெதுவெதுப்பான நீருடன் கலந்து உட்கொள்ளலாம்.

எச்சரிக்கை:

அதிமதுரத்தை அதிகமாக உட்கொள்வது உயர் இரத்த அழுத்தம், பொட்டாசியம் குறைபாடு மற்றும் நீர் தேக்கத்திற்கு வழிவகுக்கும், எனவே மருத்துவ ஆலோசனையுடன் பயன்படுத்துவது நல்லது.



## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*கணவன் - மனைவி நகைச்சுவை*

*மனைவி: ஏங்க, நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி எனக்கு எவ்வளவு கிப்ட் கொடுத்தீங்க... இப்போ ஏன் எதையும் கொடுக்க மாட்டேங்கிறீங்க?*

*கணவன்: நீ எங்கயாவது பார்த்திருக்கியா? மீன் பிடிச்சதுக்கு அப்புறம் யாராவது மீனுக்கு "இரை" போடுவாங்களா?*



*மனைவி: டாக்டர், என் கணவர் தூக்கத்துல பயங்கரமா கத்துறாரு, நான் என்ன பண்றது?*

## அவரை விட்டு விலகி இருக்க முடியாது.. தனது கணவர் ராஜ் குறித்து பேசிய நடிகை சமந்தா

நடிகை சமந்தா, இவருக்கு இந்திய சினிமாவில் அறிமுகமே தேவையில்லை. கடந்த 14 ஆண்டுகளாக முன்னணி நடிகையாக வலம் வரும் இவர், கோலிவுட் முதல் பாலிவுட் வரை பிரபலமான நட்சத்திரமாக ஜொலித்துக்கொண்டிருக்கிறார்.

இவர் நடிப்பில் அடுத்ததாக மா இண்டி பங்காரம் எனும் திரைப்படம் உருவாகி வருகிறது. இப்படத்தில் ஆக்‌ஷன் அவதாரத்தில் சமந்தா நடித்துள்ளார். இப்படத்தை திரையில் காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

நடிகை சமந்தாவின் முதல் திருமணம் விவாகரத்தில் முடிந்ததை நாம் அறிவோம். இதன்பின் பல வேதனைகளை அனுபவித்த



சமந்தா, கடந்த ஆண்டு இயக்குநர் ராஜ் நிடிமோரு என்பவரை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களுடைய திருமணம் ஈஷா யோகா மையத்தில் நடந்தது. இயக்குநர் ராஜ் நிடிமுரு நடிகை சமந்தாவை வைத்து தி பேமிலி மேன் 2 மற்றும் சிட்டாடல் ஆகிய வெப் தொடர்களை இயக்கியுள்ளார்.

விலகி இருக்க முடியாது இந்த நிலையில், சமந்தா தனது கணவர் குறித்து பேட்டி ஒன்றில் மனம் திறந்து பேசியுள்ளார். "என் வாழ்க்கையில் நடந்த எல்லாவற்றுக்கும் பிறகு, நான் நல்ல மனிதராக மாற என் கணவர் ராஜ்தான் காரணமாக இருந்தார். நாங்கள் வேலை, விளையாட்டு, உடற்பயிற்சி என அனைத்தையும் சேர்ந்துதான் செய்வோம். அதையே நாங்கள் மிகவும் விரும்புகிறோம். என்னால் ஒரு நாள் கூட அவரை விட்டு விலகி இருக்க முடியாது. அவர் இருப்பதால் நான் இன்னும் நல்ல நடிகையாகவும் மாறியிருக்கிறேன்" என கூறியுள்ளார்.







இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை கேப்ரியல்லா தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை அதில் அவ்வப்போது பதிவு செய்வார். இதோ நீங்களே அவருடைய சமீபத்திய புகைப்படங்களை பாருங்க:

## யூத் பாக்ஸ் ஆபிஸ்: வசூல் சாதனை படைக்கும் கென் கருணாஸ்...



புதிதாக வெளிவரும் திரைப்படங்களின் வசூல் குறித்து தொடர்ந்து பார்த்து வருகிறோம். இந்த ஆண்டு இதுவரை தமிழ் சினிமாவில் வெளிவந்த தாய் கிழவி, யூத், வித் லவ் ஆகிய திரைப்படங்கள் வசூலில் மிகப்பெரிய லாபத்தை தயாரிப்பு நிறுவனங்களுக்கு கொடுத்துள்ளன.

இதில், கடந்த மாதம் கென் கருணாஸ் இயக்கி நடித்து வெளிவந்த யூத் திரைப்படம் முதல் நாளில் இருந்தே பாக்ஸ் ஆபிஸில் பட்டையை கிளப்பி வருகிறது.

இளைஞர்களை கவரும் வகையில் அமைந்திருந்த இப்படத்திற்கு அமோக வரவேற்பு கிடைக்க, விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் மாபெரும் வெற்றியை தன்வசப்படுத்தியது. இதன்மூலம், தனது முதல் படத்திலேயே ஹீரோவாகவும், இயக்குநராகவும் வெற்றி பெற்றுள்ளார் கென் கருணாஸ்.

இந்த நிலையில், யூத் திரைப்படத்தின் இதுவரையிலான வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இதுவரை உலகளவில் யூத் திரைப்படம் ரூ. 74.5 கோடி வசூல் செய்துள்ளது. இனி வரும் நாட்களிலும் இந்த வசூல் வேட்டை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# INVITATION

SSpS
Missionary Sisters
Servants of the Holy Spirit

"Celebrating God's Faithfulness"

Dear.......................................................................

With immense joy and profound gratitude to God, we the Missionary Sisters Servants of the Holy Spirit of Divine Word Province, India East cordially invite you to the Golden and Silver Jubilee celebration of our sisters.



Sr. Regina Dung Dung SSpS



Sr. Shanti PC SSpS



Sr. Kanti Kullu SSpS



Sr. Sophia A Mary SSpS



Sr. I Amirtha Vimala SSpS



Sr. Anima Kujur SSpS

*Solemnized by:*

Main Celebrant- **Most Rev. Niranjan Sual Singh**
*(Bishop of Sambalpur Diocese)*

Concelebrants- **Rev. Fr. Anuranjan Bilung SVD**
*(Provincial Superior, SVD-INE Province)*
**Rev. Fr. Charles Irudayam**
**Rev. Fr. Antony Swamy SVD**
**Rev. Fr. Bijay Lama OCD**

**Date : 11 April 2026**
**Time : 10.00 am**
**Venue : Holy Spirit Convent Jharsuguda, Odisha**

*We look forward to your esteemed presence!*

Sr. Bindhu Mathew SSpS
**Sr. Bindhu Mathew SSpS**
**Provincial Leader – INE**

Sr. Shanti Minj SSpS
**Sr. Shanti Minj SSpS**
**Community Leader**

## பஞ்சாபில் காலிஸ்தான் பயங்கரவாத சதி முறியடிப்பு: வெடிகுண்டுகளுடன் இருவா் கைது

**புதுடெல்லி, ஏப்.11:**

பஞ்சாபில் வெடிகுண்டுகளுக்கான மூலப்பொருள் மற்றும் இரு கையெறி குண்டுகளுடன் காலிஸ்தான் பிரிவினைவாத பயங்கரவாதிகள் இருவா் கைது செய்யப்பட்டனா்.

பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்புடன் தொடா்பில் இருந்த இவா்கள் பஞ்சாபில் பெரிய அளவிலான பயங்கரவாதத் தாக்குதலை நடத்த திட்டமிட்டிருந்தனா் என்று பஞ்சாப் காவல் துறையினா் தெரிவித்தனா்.

இது தொடா்பாக காவல் துறையினா் மேலும் கூறியதாவது:

குா்தாஸ்பூா் மாவட்டத்தைச் சோ்ந்த ஆகாஷ் மசிக், ஜப்லாவுன் ஆகிய இருவா் கைது செய்யப்பட்டனா். இவா்கள் தடை செய்யப்பட்ட பப்பா் கல்சா இன்டா்நேஷனல் என்ற காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பைச் சோ்ந்தவா்கள். ஐஎஸ்ஐ அமைப்புடன் இணைந்து பஞ்சாபில் மிகப்பெரிய நாசவேலையை நிகழ்த்த இவா்கள் திட்டமிட்டிருந்தனா். இருவா் மீதும் ஏற்கெனவே குற்ற வழக்குகள் உள்ளன.

அவா்களிடம் இருந்து ஒரு கிலோ எடையுள்ள வெடிகுண்டுகளுக்கான மூலப்பொருள் மற்றும் இரு கையெறி குண்டுகள், குண்டுகளை வெடிக்கச் செய்வதற்கான மின்னணுப் பொருள்கள், பேட்டரி, வயா்கள், தொலைத்தொடா்பு கருவிகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன.

மத்திய விசாரணை அமைப்புகள் அளித்த உளவுத் தகவல்களின் அடிப்படையல் அமிருதரஸில் உள்ள மாநில உளவுப் பிரிவு, குா்தாஸ்பூா் காவல் துறையினா் இணைந்து நடத்திய கூட்டு நடவடிக்கையில் இவா்கள் கைது செய்யப்பட்டனா்.

## ஹரியாணா அரசின் வங்கிக் கணக்கில் ரூ.590 கோடி மோசடி: விரைவில் விசாரணையை தொடங்குகிறது சிபிஐ

**புதுடெல்லி, ஏப்.11:**

ஐடிஎஃசி வங்கியில் உள்ள ஹரியாணா அரசின் கணக்கில் இருந்து ரூ.590 கோடி மோசடி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பான வழக்கில் சிபிஐ விரைவில் விசாரணையை தொடங்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து சிபிஐ அதிகாரிகள் வட்டாரங்கள் கூறியதாவது: சண்டிகரில் உள்ள ஐடிஎஃசி ஃபர்ஸ்ட் வங்கிகிளையில் ஹரியாணா மாநில அரசின் கணக்கு இருந்தது. அந்த கணக்கை ஆய்வு செய்தபோது, ஹரியாணா அரசால் டெபாசிட் செய்யப்பட்டிருந்த பணத்தில் ரூ.590 கோடி மாயமாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை இந்த சம்பவம் ஏற்படுத்தியது.

இந்த சம்பவத்தில் வங்கித் தரப்பில், ஊழியர்கள் உள்ளிட்டோர் பணத்தை திருடி விட்டதாக விளக்கம் தரப்பட்டது.

மேலும், வங்கி நிர்வாகம் உடனடியாக பணம் அனைத்தையும் 100 சதவீதம் ஹரியாணா அரசு கணக்கில் செலுத்தியது. இதுகுறித்து மாநில ஊழல் கண்காணிப்பு காவல்துறையினர் விசாரணை நடத்தி, முன்னாள் ஊழியர்கள் உள்ளிட்ட பலரை கைது செய்தனர்.

இந்நிலையில் ஹரியாணா அரசு தரப்பில் கடந்த மாதம் இந்த வழக்கு விசாரணையை சிபிஐ வசம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் அந்த வழக்கு விசாரணையை விரைவில் சிபிஐ தொடங்கவுள்ளது. ஏற்கெனவே இதுகுறித்து ஹரியானா ஊழல் கண்காணிப்பு காவல்துறையினர் பதிந்த வழக்கை அடிப்படையாகக் கொண்டு, சிபிஐ புதிதாக முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவுள்ளது.

## உலகளாவிய சவால்களுக்கு இடையே சிறப்பான நிலையில் இந்தியா: உலக வங்கி

**புதுடெல்லி, ஏப்.11:**




'உலகளவில் எரிசக்தி விநியோக பாதிப்பு ஏற்பட்டுள்ள சூழலிலும், அதிக அளவில் அந்நியச் செலாவணிக் கையிருப்பு, நிதிச் சுதந்திரம், குறைந்த பணவீக்கம் உள்ளிட்ட போதிய பாதுகாப்பு வளங்களுடன் இந்தியா சிறப்பான நிலையில் உள்ளது. இது, உலகளாவிய சவால்களுக்கு இடையே, பொருளாதார வளா்ச்சிக்கு உதவும்' என்று உலக வங்கி சாா்பில் வியாழக்கிழமை தெரிவிக்கப்பட்டது.

தெற்காசிய பொருளாதார மேம்பாடுத்தல் அறிக்கையை உலக வங்கி புதன்கிழமை வெளியிட்ட நிலையில், அதுதொடா்பாக வியாழக்கிழமை நடைபெற்ற மாநாட்டில் இக் கருத்தை உலக வங்கியின் தெற்காசிய மண்டல இயக்குநா் செபாஸ்டீன் எக்காா்த் இக் கருத்தைத் தெரிவித்தாா்.

அவா் மேலும் கூறுகையில், 'இந்தியா வலுவான கொள்கை ரீதியிலான திட்டங்களையும், அதிக அளவிலான அந்நியச் செலாவணி கையிருப்பையும், நிதிச் சுதந்திரத்தையும் கொண்டுள்ளது. அதோடு, உலகளவில் எரிசக்தி விநியோக பாதிப்பு ஏற்பட்டுள்ள தற்போதைய சூழலிலும், குறைந்த பணவீக்கம், இலக்குகளை எட்டுவதற்கான வலுவான பாதுகாப்பு வளங்களையும் பெற்றுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துடனான தடையற்ற வா்த்தக ஒப்பந்தம், புதிய தொழிலாளா் நலன் சாா்ந்த திட்டங்கள் உள்ளிட்டவை இந்த வலுவான பொருளாதார வளா்ச்சிக்கான காரணிகளாகப் பாா்க்கப்படுகின்றன. உலகளவில் மற்ற வளா்ந்துவரும் சந்தைகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவும், அது சாா்ந்த பிராந்தியமும் தொடா்ந்து மிகவும் வலுவான, ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க பிராந்தியமாக இருக்கும் என எதிா்பாா்க்கப்படுகிறது' என்று தெரிவித்தாா்.

முன்னதாக, உலக வங்கி வெளியிட்ட தெற்காசிய பொருளாதார மேம்படுத்துதல் அறிக்கையில், வலுவான உள்நாட்டு தேவை மற்றும் ஏற்றுமதி துறை சாா்ந்த மீள்திறன் காரணமாக, இந்தியாவின் பொருளாதார வளா்ச்சி கடந்த 2025-ஆம் ஆண்டில் 7.1 சதவீதமாக இருந்தது 2026-ஆம் நிதியாண்டில் 7.6 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் 2027-ஆம் நிதியாண்டில் இந்த வளா்ச்சி விகிதம் 6.6 சதவீதமாக குறையும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட உலகப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கையில் இந்தியாவின் வளா்ச்சி விகிதம் 6.5 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டதைக் காட்டிலும், தற்போதைய மதிப்பீடு சற்று அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கான உலக வங்கியின் முதன்மைப் பொருளாதார நிபுணா் ஆரேலியன் க்ரூஸ் கூறுகையில், 'இந்தியாவின் ஏற்றுமதிகள் உலகிலேயே மிக உயா்ந்த வரி விதிப்புகளை எதிா்கொண்டபோதும், 2026-ஆம் நிதியாண்டில் உலகின் மிக வேகமாக வளா்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாக இந்தியா தொடா்ந்து திகழ்ந்து வருகிறது. என்றாா்.

## நாட்டின் மிக பெரிய வருங்கால சொத்து தொழில்நுட்பம்: மத்திய மந்திரி கட்காரி பேச்சு

**புதுடெல்லி, ஏப்.11:**




டெல்லியில் நடந்த அகில இந்திய மேலாண்மை கூட்டமைப்பின் வருடாந்திர மாநாட்டில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறைக்கான மந்திரி நிதின் கட்காரி கலந்து கொண்டார்.

அவர் பேசும்போது, இந்தியாவின் வளர்ச்சி பாதையை வடிவமைப்பதில், தொழில்நுட்பம் சார்ந்த உருமாற்றம், ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்பு ஆகியவை ஒரு முக்கிய பங்கு வகிக்கும் என்றார். அதற்காக பல யோசனைகள் உள்ளன.

அதனாலேயே, வாழ்க்கைக்கு தேவையானது தொழில்நுட்பம் என்பது நம்முடைய தொலைநோக்கு பார்வையாக உள்ளது. அது நம்முடைய நாட்டின் வருங்காலத்திற்கான மிக பெரிய சொத்து. அது அதிக அளவில் சாதிக்க கூடிய ஒன்றாக இருக்கும் என்றார்.

அடுத்த 7 ஆண்டுகளில் உலக அளவில் தானியங்கி சந்தையில் இந்தியாவை முதல் இடத்திற்கு கொண்டு வருவதற்கான நோக்கத்திற்கான இலக்கையும் நிதின் கட்காரி அப்போது பகிர்ந்து கொண்டார்.

## புதுச்சேரி: விசில் சின்னத்துக்கு ஓட்டுபோட்டதை வீடியோ எடுத்து வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை

**புதுச்சேரி, ஏப்.11:**

புதுச்சேரி சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று நடந்தது. அப்போது வாக்குச்சாவடிக்குள் செல்போன் எடுத்து செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தேர்தல் துறையின் உத்தரவை மீறி சிலர் செல்போனை வாக்குச்சாவடிக்குள் எடுத்து சென்றுள்ளனர்.

அங்கு த.வெ.க.வுக்கு விசில் சின்னத்தில் தங்களது வாக்குகளை பதிவு செய்துவிட்டு, .வி.பாட் எந்திரத்தில் விசில் சின்னம் வரும் வரை வீடியோவாக செல்போனில் படம் பிடித் துள்ளனர். அந்த வீடியோவை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர்.

இது தற்போது சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது.

இது குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட கலெக்டருமான குலோத்துங்கனிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

அவர் இது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான குலோத்துங்கனிடம் கேட்ட போது 'சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட வீடியோக்களை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளோம். சமூக வலைத்தளங்களில் பதிவிட்டோர் மீது சட்டப்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

## திருமண அழைப்பிதழ் கொடுக்க சென்ற புதுமாப்பிள்ளைக்கு நேர்ந்த பரிதாபம்

**புதுடெல்லி, ஏப்.11:**

கர்நாடக மாநிலம் பெங்களூரு பனசங்கரியில் வசித்து வந்தவர் அக்சித் (வயது 27). இவர், சொந்தமாக பெட்ரோல் விற்பனை நிலையம் வைத்து நடத்தி வந்தார். அக்சித்துக்கும் ஒரு பெண்ணுக்கும் திருமணம் பேசி முடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அக்சித்துக்கும், அந்த பெண்ணுக்கும் வருகிற 30-ந்தேதி திருமணம் நடைபெற உள்ளது. வருகிற 29-ந்தேதி மாலையில் திருமண வரவேற்புக்கு 2 குடும்பத்தினரும் ஏற்பாடு செய்து வந்தனர்.

அக்சித்தின் நண்பர் உளிமாவில் வசித்து வருகிறார். சம்பவத்தன்று இரவு தனது திருமண அழைப்பிதழை உளிமாவில் வசிக்கும் நண்பர் மற்றும் சில உறவினர்களுக்கு கொடுக்க அக்சித் சென்றிருந்தார். பின்னர் உளிமாவில் உள்ள கோதண்டராம சாமி கோவிலில் நடைபெற்ற தேர் திருவிழாவை அக்சித், அவரது நண்பருடன் சென்று பார்த்தார். அதன்பிறகு, நண்பரிடம் திருமண அழைப்பிதழை கொடுத்து விட்டு வீட்டுக்கு புறப்பட அக்சித் தயாரானார். அப்போது அதிகாலையில் கோவிலில் பல்லக்கு ஊர்வலம் நடப்பதால், அதை பார்த்துவிட்டு வீட்டுக்கு செல்லுமாறு நண்பர் கூறியுள்ளார். இதனால் இரவு நண்பர் வீட்டிலேயே அக்சித் தங்கினார். நேற்று அதிகாலையில் நடைபெற்ற பல்லக்கு ஊர்வலத்தை பார்க்க அக்சித் தனது நண்பருடன் சென்றார். அதிகாலை 5 மணியளவில் டிராக்டரில் பல்லக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் பங்கேற்று அக்சித் சாமி தரிசனம் செய்தார். அந்த சந்தர்ப்பத்தில் எதிர்பாராதவிதமாக பல்லக்கு சுமந்து வந்த டிராக்டர் அக்சித் மீது மோதியது. இதில், அவர் பலத்தகாயம் அடைந்து உயிருக்கு போராடினார். உடனே அங்கிருந்தவர்கள் அக்சித்தை மீட்டு அருகில் உள்ள ஆஸ்பத் திரியில் அனுமதித்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி அக்சித் இறந்துவிட்டார். இதுபற்றி அறிந்ததும் உளிமாவு போக்குவரத்து போலீசார் மற்றும் உயர் போலீஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தை பார்வை யிட்டு விசாரணை நடத்தினார்கள்.

## மேற்கு வங்காளத்திற்கு 6 உத்தரவாதங்கள்; பிரதமர் மோடி அதிரடி அறிவிப்பு

**ஹல்தியா, ஏப்.11:**



மேற்கு வங்காள சட்டசபைக்கான தேர்தல் 2 கட்டங்களாக நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துஉள்ளது. சட்டசபை தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன. இதனை தொடர்ந்து, பா.ஜ.க.வுக்கு வாக்கு சேகரிக்கும் வகையில், மேற்கு வங்காளத்தின் ஹல்தியா நகரில் நடந்த அரசியல் பொதுக்கூட்டம் ஒன்றில் பிரதமர் மோடி இன்று கலந்து கொண்டு பேசினார். அவர் கூறும்போது, 7-வது ஊதிய குழு அமைப்பது, நம்பிக்கைக்குரிய சூழலை உருவாக்குவதற்கு உறுதியளிப்பது உள்ளிட்டவற்றை குறிப்பிட்டு பேசினார்.

திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் நடந்த ஊழல், பணமோசடி மற்றும் பெண்கள் தொடர்பான குற்றங்கள் ஆகியவை மீண்டும் விசாரிக்கப்படும் என அவர் உறுதி கூறினார். பா.ஜ.க. அரசு மாநிலத்தில் ஆட்சியமைத்த பின்னர், சட்டத்தின் பிடியில் இருந்து திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியின் குண்டர்கள் ஒருவரும் தப்ப முடியாது என்று பிரதமர் மோடி கூறினார்.

அவர் வெளியிட்ட 6 உத்தரவாதங்களின்படி,

1) மேற்கு வங்காளத்தில் அச்ச சூழலை பா.ஜ.க. அரசு நீக்கும், சட்டத்தின் ஆட்சிக்கான நம்பிக்கையை மீட்டெடுப்போம்.

2) பொதுமக்களுக்கு முழு அளவில் பதிலளிக்க கூடிய பொறுப்பான நிர்வாகம் செயல்படும்.

3) ஒவ்வொரு பணமோசடி, ஊழல், நம்முடைய மகள்களுக்கு எதிரான அநீதி, ஒவ்வொரு பாலியல் பலாத்கார வழக்கும் மீண்டும் விசாரிக்கப்படும்.

4) திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியில் ஊழலில் ஈடுபட்டவர்கள் சிறையில் இருப்பார்கள். அது, மந்திரியாகவோ அல்லது காவலாளியாகவோ இருப்பினும் கூட சட்டம் ஒவ்வொருவரையும் கணக்கில் கொள்ளும்.

5) அரசியல் சாசனத்தின்படி, அகதிகளுக்கு ஒவ்வொரு உரிமை மற்றும் தனியுரிமைக்கான உத்தரவாதம் வழங்கப்படும். எனினும், ஊடுருவல்காரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்றும் இந்தியாவில் தொடர்ந்து இருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6) பா.ஜ.க. அரசு உருவானதும், 7-வது ஊதிய குழு அமல்படுத்தப்படும் என பிரதமர் மோடி கூறினார்.

## விரலில் காயம்.. தடைகளை தாண்டி வாக்கு செலுத்திய இளம்பெண்

**திருச்சூர், ஏப்.11:**

கேரள சட்டசபைக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த நிலையில், திருச்சூரில் இளம்பெண் ஒருவரை வாக்களிக்க வாக்குச்சாவடி அதிகாரி மறுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. திருச்சூர் கூர்க்கஞ்சேரி பகுதியை சேர்ந்தவர் அக்சயா (வயது 26). இவர் திருச்சூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள வாக்குச்சாவடியில் ஓட்டு போட வந்தார்.



அவரது இடது கை ஆள்காட்டி விரலில் காயம் ஏற்பட்டு, கையில் தையல் போடப்பட்டு பேண்டேஜ் சுற்றப்பட்டு இருந்தது. இதனால் அந்த விரலில் மை வைக்க முடியவில்லை. ஆனால், தேர்தல் ஆணைய விதிமுறைப்படி இடது கை ஆள்காட்டி விரலில் அடையாள மை வைக்க வேண்டும் என்பதால், அவரை ஓட்டு போட வாக்குச்சாவடி அதிகாரி அனுமதிக்கவில்லை. அவரிடம், அக்சயா தான் சமையல் செய்யும் போது காயம் ஏற்பட்டதாக கூறி ஓட்டு போட அனுமதி கேட்டார்.

ஆனால், கையில் உள்ள கட்டை அவிழ்த்து காயத்தை பார்க்க வேண்டும் என்று அதிகாரி கட்டாயப்படுத்தினார். பின்னர் அந்த இளம்பெண் மருத்துவ சான்றிதழை காண்பித்தார். அதை ஏற்க வாக்குச்சாவடி அதிகாரி மறுத்தார். இதுதொடர்பாக அவருடன் இடது முன்னணி வேட்பாளர் சுனில் குமார் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

தகவல் அறிந்த மாவட்ட கலெக்டர், இளம்பெண் வாக்களிக்க அனுமதித்தார். அதன்பேரில் இளம்பெண்ணுக்கு நடுவிரலில் மை அடையாளம் வைக்கப்பட்டு, ஓட்டு போட அனுமதிக்கப்பட்டார். இந்த சம்பவத்தால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## ஆந்திரா: செல்ஃபி எடுத்த 3 மாணவிகள் நீரில் மூழ்கி உயிரிழப்பு

**அமராவதி, ஏப்.11:**

செல்ஃபி எடுக்க முயன்ற 3 மாணவிகள் ஏரியில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். ஒருவர் உயிர் பிழைத்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஆந்திர மாநிலம், அல்லூரி மாவட்டம், அனந்தகிரி மண்டலம், லுங்கபர்த்தி கிராமத்தை சேர்ந்த திரிஷா (17), ரத்னகுமாரி (16), பவித்ரா (16) மற்றும் ஒரு தோழி என மொத்தம் 4 பேரும் சமீபத்தில் பிளஸ் 2 தேர்வு எழுதினர். தற்போது விடுமுறை என்பதால், 4 பேரும் நேற்று நீச்சல் பழக அதே ஊரில் உள்ள ஏரிக்கு சென்றனர்.

குளிப்பதற்கு முன் சற்று நீரில் இறங்கி செல்ஃபி எடுத்தனர். அப்போது அனைவரும் நீரில் விழுந்து அடித்து செல்லப்பட்டனர். ஆனால், அதில் ஒரு பெண் மட்டும் உயிர் தப்பினார். மற்ற மூவரும் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். இது குறித்து அனந்தகிரி போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கர்நாடக இடைத்தேர்தலில் 65 சதவீத வாக்குப்பதிவு

**பெங்களூரு, ஏப்.11:**

கர்நாடகாவில் பாகல்கோட்டை, தாவணகெரே தெற்கு ஆகிய 2 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நேற்று நடைபெற்றது. 2 தொகுதிகளிலும் காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை விறுவிறுப்பாக நடைபெற்றது.

நேற்று மாலை 6 மணி நிலவரப்படி பாகல்கோட்டையில் 65.92 சதவீதமும், தாவணகெரே தெற்கு தொகுதியில் 64.25 சதவீதமும் வாக்குகள் பதிவாகின. ஒட்டு மொத்தமாக இரு தொகுதிகளிலும் பெரிய அளவில் மோதல்கள் இல்லாமல், அமைதியான முறையில் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்றதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

திரிபுரா, நாகாலாந்து: நாகாலாந்து மாநிலம் கோரிடாங் சட்டப்பேரவைக்கு நேற்று நடைபெற்ற இடைத்தேர்தலில் 80.62 சதவீத வாக்குகளும், திரிபுரா மாநிலம் தர்மா நகர் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 79.84 சதவீத வாக்குகளும் பதிவாயின.

## சிஆர்பிஎஃப் படையில் உள்ள பாகுபாட்டை நீக்குவோம்: ராகுல் காந்தி

**புதுடெல்லி, ஏப்.11:**

மத்திய ஆயுதப்படை (சிஆர்பிஎஃப்) படையினரின் வீரதீர தினத்தை முன்னிட்டு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று எக்ஸ் தளத்தில் கூறியதாவது:

"சிஆர்பிஎஃப் படையினரின் வீரதீர தினத்தை முன்னிட்டு, நமது படையைச் சேர்ந்த துணிச்சலான மற்றும் வீரமிக்க வீரர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், மரியாதைக்குரிய அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறேன். சிஆர்பிஎஃப் படையினரின் வீரமும் தியாகமும் ஒவ்வொரு நாளும் நமது தேசத்தைப் பாதுகாக்கின்றன.

அதே நேரம், சிஆர்பிஎப் மற்றும் சிஐஎஸ்எஃப் பணியாளர்களுக்கு உரிய நேரத்தில் பதவி உயர்வுகளோ அல்லது தங்கள் சொந்தப் படையையே வழி நடத்தும் உரிமையோ கிடைப்பதில்லை. இதற்கு ஒரே காரணம், அப்படையின் உயர்மட்டத் தலைமைப் பதவிகள் அப்படைக்கு வெளியிலிருந்து வருபவர்களுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளன என்பதே ஆகும். காங்கிரஸ் ஆட்சிக்கு வரும் போது இந்த பாகுபாட்டை நீக்குவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




## இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம் ராமேஸ்வரம் மீனவர் 10 பேர் சிறைபிடிப்பு

**ராமேஸ்வரம், ஏப்.11:** ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 346 விசைப்படகுகள் மீன்பிடி அனுமதி டோக்கன் பெற்று நேற்று முன்தினம் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றன. இரவு இந்திய கடல் எல்லை அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை, ரோந்து படகில் வந்த இலங்கை கடற்படையினர் விரட்டியடித்தனர். இதையடுத்து மீனவர்கள் வேறு பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்றனர். மீண்டும் வந்த இலங்கை கடலோர காவல் படை மற்றும் கடற்படை ரோந்து படகுகள் மீனவர்களின் படகுகளை சுற்றிவளைத்தனர்.

இதில் சேந்தி ராயப்பன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் சென்ற ராமேஸ்வரம் மீனவர்களான ஆரோக்கிய ஆசாத் (36), நிர்மல் (41), கெர்ஷின் ரிசப் (28), நிதிஷ்குமார் (28) ஜான் சிசர்ட் (45), மெல்டன் (36), சுரேஷ் (46), சரவணன் (48), சந்தன மரியான் (43), அரவிந்த் பாண்டி (25) ஆகிய 10 பேரை படகுடன் சிறைபிடித்தனர். மீனவர்களை படகுடன் தலைமன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று, மேல் நடவடிக்கைகாக மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அதிகாரிகள் மீனவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்தினர். இச்சம்பவம் ராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஞானசீலன் விசைப்படகு மீனவர் சங்கத்தலைவர் காரல் மார்க்ஸ் கூறுகையில், “இலங்கை கடற்படை மீனவர்களை கைது செய்து படகை பறிமுதல் செய்துள்ள சம்பவம் கடும் கண்டனத்துக்குரியது. மீனவர்களின் பிரச்னையை ஒன்றிய பாஜ அரசு வேடிக்கை பார்ப்பது ஒட்டுமொத்த மீனவர்களையும் வஞ்சிக்கும் செயலாகும். சிறையில் உள்ள மீனவர்களை உடனே விடுதலை செய்ய இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், சட்டமன்றத் தேர்தலில் மீனவ சமூகமும் பாஜவை கண்டு கொள்ளாமல் புறக்கணிக்கும்” என்றார்.

## மதுரை தவெக வேட்பாளரின் மாமனாருக்கு ஆயுள் தண்டனை: கொலை வழக்கில் மதுரை கோர்ட் தீர்ப்பு

**மதுரை, ஏப்.11:** மதுரை, கருப்பாயூரணியை அடுத்த ஒடைப்பட்டியைச் சேர்ந்தவர் சின்னக்கருப்பையா. பட்டியலின சமுதாயத்தை சேர்ந்த இவர், கடந்த 2015ல் மாவட்ட கலெக்டரிடம் ஒரு புகார் மனு அளித்தார். அதில், இவர் வசித்த பகுதியை சேர்ந்த முன்னாள் ஊராட்சித் தலைவரின் கணவர் சம்பத்குமார் (62), புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருப்பதாக தெரிவித்து இருந்தார். இதனால் ஆத்திரமடைந்த சம்பத்குமார் மற்றும் அவரது தரப்பினர், சின்னக்கருப்பையாவை பழிவாங்க திட்டமிட்டனர். இதையடுத்து சம்பத்குமார், சேஷன் (55), பரமசிவம் (45), சேகர் (51), ராம்குமார் (35), பூமிநாதன் (35) ஆகியோர் சேர்ந்து 2016ல் சின்னக்கருப்பையாவை வெட்டிக் கொலை செய்தனர்.

இந்த படுகொலை தொடர்பாக கருப்பாயூரணி போலீசார் வழக்குப்பதிந்து சம்பத்குமார் உள்ளிட்ட 6 பேரையும் கைது செய்தனர். இவர்கள் மீதான கொலை வழக்கின் விசாரணை, மதுரை மாவட்ட தீண்டாமை தடுப்பு சிறப்பு கோர்ட்டில் நடந்து வந்தது. இதற்கிடையே குற்றம் சாட்டப்பட்ட சேஷன், உடல்நல பாதிப்பால் உயிரிழந்தார். இந்த வழக்கில் மற்றவர்கள் மீதான கொலை வழக்கு உரிய சாட்சி, ஆதாரங்களுடன் அரசுத்தரப்பில் உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து சம்பத்குமார் உள்ளிட்ட 5 பேருக்கும், ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.5,000 அபராதம் விதித்து நீதிபதி நேற்று தீர்ப்பளித்தார். தீர்ப்புக்காக நீதிமன்றத்தில் நேரில் ஆஜரான 5 பேரும், மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள சம்பத்குமார், மதுரை வடக்கு தொகுதி தவெக வேட்பாளர் கல்லாணையின் மாமனார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசு பஸ்களில் எடுத்து வந்த ரூ.50.50 லட்சம் பறிமுதல்

**ஓசூர், ஏப்.11:** கர்நாடக- தமிழக எல்லையான கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அடுத்த ஜூஜூவாடி சோதனை சாவடியில் நேற்று மாலை தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது கர்நாடக மாநிலம் பெங்களூருவில் இருந்து, ஓசூருக்கு வந்த அரசு பஸ்களை நிறுத்திய அதிகாரிகள் அதிரடியாக சோதனை செய்தனர். அப்போது பயணி ஒருவர் உடைமையை சோதனை செய்தபோது, அதில் உரிய ஆவணமின்றி கொண்டு சென்ற ரூ.15 லட்சம் ரொக்கம் இருந்தது கண்டறியப்பட்டது.

அதை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்து விசாரணை செய்தனர். பெங்களூருவை சேர்ந்த பிரணவ் (66) என்பவர் வேலூருக்கு பணத்தை கொண்டு சென்றது தெரியவந்தது. தொடர்ந்து 15 நிமிடம் கழித்து பெங்களூருவில் இருந்து வந்த மற்றொரு அரசு பஸ்சை நிறுத்திய, பறக்கும் படை அதிகாரிகள் பயணிகளின் உடைமைகளை சோதனை செய்தனர்.

அப்போது சேலத்தை சேர்ந்த ஹாஜா(65) என்பவரிடம், உரிய ஆவணங்கள் இன்றி ரூ.35.50 லட்சம் ரொக்கம் இருந்தது கண்டறியப்பட்டது. இதையடுத்து பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு உள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட ரூ.50.50 லட்சத்தை, ஓசூர் சப் கலெக்டர் ஆக்ருதி சேத்தியிடம் ஒப்படைத்தனர்.

## என் குழந்தையை கடத்திச்சென்று, கொலை மிரட்டல் விடுக்கிறார் மயிலாப்பூர் தவெக வேட்பாளர் வெங்கடரமணன் மீது மனைவி பரபரப்பு புகார்: கமிஷனர் அலுவலகத்தில் முறையீடு

**சென்னை, ஏப்.11:** என் குழந்தையை அபகரித்துக்கொண்டு தன்னை கொன்றுவிடுவதாக கொலை மிரட்டல் விடுக்கும் மயிலாப்பூர் தவெக வேட்பாளர் வெங்கடரமணன் மீது அவரது மனைவி மீனாட்சி போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் பரபரப்பு புகார் ஒன்று அளித்துள்ளார். சென்னை வேப்பேரியில் உள்ள போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் நேற்று வடபழனி பகுதியை சேர்ந்த ரம்யா (எ) மீனாட்சி (40) புகார் ஒன்று அளித்தார். அதன் பிறகு அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

சென்னை பம்மல் பகுதியை சேர்ந்த பத்மநாமன் மகன் மணிகண்டன் (எ) வெங்கட்ரமணன் என்பவருடன் கடந்த 19.2.2012ம் ஆண்டு, நடிகர் விஜய்க்கு சொந்தமான போரூர் ரவுண்டனா அருகில் உள்ள ‘சங்கீதா கல்யாண மண்டபத்தில்’ எங்களுக்கு திருமணம் நடந்தது.

பின்னர் 2016ம் ஆண்டு யோகவர்ஷினி என்ற பெண் குழந்தை பிறந்தது. பிறகு கொரோனா காலத்தில் நான் இரண்டாவது முறையாக கர்ப்பமானேன். அப்போது கொரோனா காலத்தில் குழந்தை நமக்கு வேண்டாம் என்று வெங்கட்ரமணன் கூறினார். அதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை. பிறகு அவர் கட்டாயப்படுத்தி ஒரு தனியார் மருத்துவமனையில் அவர் போன் செய்து கூறியபடி எனக்கு கருக்கலைப்பு செய்யப்பட்டது. பின்னர் கொரோனா காலம் என்பதால் எனது தாய் வீட்டில் இருக்கும் படியும், கொரோனா முடிந்ததும் நான் வந்து அழைத்து கொள்கிறேன் என்றும் கூறினார்.

## பறக்கும் படைகளால் ரொக்கம், பொருட்கள் பறிமுதல்: உரிய ஆவணங்கள் காண்பித்ததால் ரூ.1.66 கோடி திரும்ப ஒப்படைப்பு




**சென்னை, ஏப்.11:** சென்னை மாவட்டத்தில் பறக்கும் படைகளால் பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்களில் உரிய ஆவணங்கள் காண்பித்ததால், ரூ.1.66 கோடி உரியவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, சென்னை மாநகராட்சி நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டு நடைமுறை மற்றும் தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி, முறையான ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் ரூ.10 ஆயிரத்துக்கு மேல் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் ரூ.50 ஆயிரத்துக்கும் மேல் ரொக்கமாக கொண்டு செல்லப்படும் பணம் பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்படுகின்றன.

பின்பு, விசாரணையில் முறையான ஆவணங்களை மேல்முறையீட்டு குழுவிடம் தாக்கல் செய்யும் பட்சத்தில் மீண்டும் உரிய நபரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்த வகையில், சென்னை மாவட்டத்தில் ஆவணங்கள் இன்றி பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை விடுவிப்பதற்கு மேல்முறையீட்டு அலுவலர்கள் அடங்கிய குழு உதவி ஆணையர் தலைமையில், சென்னை மாநகராட்சியில் (தொடர்பு எண் 94451 90300)) அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை விடுவிக்க மேல்முறையீடு செய்பவர்கள் மனுவினை உரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்து, விடுவிப்பு ஆணையினைப் பெற்று, அரசு கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ள பொருட்கள் அல்லது ரொக்கத்தினை பறக்கும் படை அலுவலர் மூலமாக விடுவிப்பு ஆணையினை கருவூலத்தில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

சென்னை மாவட்டத்தில் பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்கள் மூலம் உரிய ஆவணங்களின்றி பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் ரொக்கத்தை விடுவிக்கக் கோரி இதுவரை 113 மேல்முறையீடுகள் பெறப்பட்டன.

கடந்த 8-ம் தேதி வரை உரிய ஆவணங்கள் சமர்ப்பித்த 98 மேல்முறையீடுகளில் ரூ.1,66,75,283 விடுவிக்கப்பட்டுள்ளது. 15 மேல்முறையீட்டு மனுக்கள் பரிசீலனையில் உள்ளன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாமல்லபுரத்தில் கோடை வெயிலுக்கு இதமான புல் குடில்கள்



**மாமல்லபுரம், ஏப்.11:** மாமல்லபுரம் சிறந்த சுற்றுலா தலமாக உள்ளது. இங்கு வரும் சுற்றுலா பயணிகள் புராதன சின்னங்களை சுற்றி பார்த்துவிட்டு, கடற்கரை கோயில் அருகே கடலில் குளித்து பொழுதை கழித்து வருவது வழக்கம்.

மேலும் கடற்கரை ஓரங்களில் உள்ள ஓட்டல், ரிசார்ட்களில் தங்கியிருக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகளும் அப்பகுதி கடலில் குளித்து மகிழ்கின்றனர்.

தற்போது கோடை வெயில் தொடங்கி உள்ள நிலையில் ஓட்டல்கள், ரிசார்ட்களில் வந்து தங்கும் விருந்தினர்களை கவர்ந்து இழுக்கும் வகையில் கோவா, அந்தமான், கொச்சின், கேரளா கோவளம், பகுதிகளில் இருப்பது போன்று “வெயில் புல்” குடில்கள் அமைக்கப்பட்டு வருகிறது. வெயில் நேரத்தில் இயற்கை காற்றுடன் இந்த குடில்களில் அமர்ந்தபடி கடலின் அலைகளை ரசிப்பது, உணவு அருந்துவது, தேநீர் குடிப்பது, புத்தகங்கள் படிப்பது, சதுரங்க விளையாட்டு விளையாடுதல் சுற்றுலா பயணிகளுக்கு புதிய உற்சாகமாக அமையும்.

இதனால் இந்த குடில்கள் உள்ள இடங்களை மாமல்லபுரம் வரும் சுற்றுலா பயணிகள் தேர்வு செய்து வருகிறார்கள். இதற்காக தற்போது ஓட்டல்கள், ரிசார்ட்டுகளில் வெயில்புல் குடில் அமைக்கும் பணி வேகமாக நடந்து வருகின்றன.

இதுகுறித்து ரிசார்ட் நிர்வாகிகள் கூறும்போது, தற்போது வெயில் காலம் என்பதால் உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் அறைகள் பதிவு செய்யும் போதே, ஏசி அறைகள் கேட்பது போன்று, மதியம் மற்றும் மாலை நேரத்தை செலவிட இயற்கை ஓலை குடில்கள் இருக்கிறதா? என கேட்கின்றனர்.

இல்லை என்றால், குடில்கள் இருக்கும் ஓட்டல்களை தேர்வு செய்து அங்கே சென்று விடுகின்றனர். இதையடுத்து கடலூர், சேத்தியாத்தோப்பு, சிதம்பரம் பகுதிகளில் இருந்து “வெயில்புல்” வரவைத்து, அதை பதப்படுத்தி பின்னர் குடில்கள் அமைக்கும் அனுபவம் உள்ள பணியாட்களை வைத்து, பழையதை புதுப்பித்து வருகிறோம். புதிதாகவும் பல்வேறு மாடல்களில் குடில்கள் அமைக்கிறோம் என்றனர்.

## பைக் மீது லாரி மோதி விபத்து: தந்தை கண்முன்னே மகள் பலி

**கன்னியாகுமரி, ஏப்.11:** கன்னியாகுமரி மாவட்டம் களியல், சிற்றாற்றின்கரை பகுதியை சேர்ந்தவர் கிறிஸ்துராஜ். ராணுவ வீரரான இவர், நேற்று இரவு தனது மகள் ஹாட்லின் அபினாவுடன் இருசக்கர வாகனத்தில் தக்கலை வழியாக சென்று கொண்டிருந்தார். தக்கலை காவல் நிலையம் முன்பாக அவர்கள் சென்றபோது, பின்னால் அதிவேகமாக வந்த கனிம வளங்கள் ஏற்றிய கனரக லாரி ஒன்று எதிர்பாராத விதமாக பைக்கின் மீது மோதியது.

இந்த கோர விபத்தில் லாரியின் சக்கரம் ஏறியதில், தலையில் பலத்த காயமடைந்த ஹாட்லின் அபினா, தனது தந்தை கண்முன்னேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பலியானார். கிறிஸ்துராஜ் காயங்களுடன் உயிர் தப்பினார். நாட்டைக் காக்கும் பணியில் இருக்கும் ஒரு ராணுவ வீரரின் மகள், லாரி மோதி உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

விபத்து நடந்த உடனேயே ஆத்திரமடைந்த நாம் தமிழர் கட்சியினர் மற்றும் பொதுமக்கள், விபத்தை ஏற்படுத்திய லாரியை சிறைபிடித்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

“கட்டுப்பாடின்றி அதிவேகமாக இயக்கப்படும் கனிமவள லாரிகளால் விலைமதிப்பற்ற உயிர்கள் பறிபோகின்றன” எனக் கூறி போராட்டக்காரர்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால், நாகர்கோவில்-திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கன்னியாகுமரி மாவட்ட எஸ்.பி. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் நள்ளிரவு வரை பேச்சுவார்த்தை நடத்தினார். விபத்துக்கு காரணமான லாரி ஓட்டுநர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், கனிமவள லாரிகளின் வேகத்தைக் கட்டுப்படுத்த உரிய விதிகள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

காவல் நிலையம் முன்பே இந்த துயர சம்பவம் நடந்ததும், அதைத் தொடர்ந்து நடந்த சாலை மறியலும் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பலியான ஹாட்லின் அபினாவின் உடல் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதுகுறித்து தக்கலை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தமிழகத்தில் வருகிற 16-ந்தேதி வரை மழைக்கு வாய்ப்பு



**சென்னை, ஏப்.11:** சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுமார் 0.9 கிமீ உயரத்தில், ஒடிசாவின் உட்பகுதிகள் முதல் மன்னார் வளைகுடா வரை தெற்கு சத்தீஸ்கர், தெலங்கானா, ராயலசீமா, உள் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.

இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

நாளை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

12-ந்தேதி தென் தமிழகம், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

13 மற்றும் 14-ந்தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

15 மற்றும் 16-ந்தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

இதனிடையே இன்று முதல் 14-ந்தேதி வரை உள் தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2-3° செல்சியஸ் இயல்பை விட அதிகமாகவும், ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இயல்பை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இன்று முதல் 12-ந்தேதிவரை அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அசௌகரியம் ஏற்படலாம்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று மற்றும் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை 37-38° செல்சியஸை ஒட்டியும். குறைந்தபட்ச வெப்பநிலை 28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

## மகளுக்கு நீதி கேட்டு தலைமைச் செயலக வாயிலில் திமுக கொடியை எரித்து காவலர் போராட்டம்



**சென்னை, ஏப்.11:** மருத்துவர்களின் தவறான சிகிச்சையால் மகளின் பாதம் அகற்றப்பட்டதாகக் கூறி, அதற்கு நீதி கேட்டு காவலர் ஒருவர் தலைமைச் செயலக நுழைவு வாயிலில் திமுக கொடியை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

திருவள்ளூர் அடுத்த காக்களூரை சேர்ந்தவர் கோதண்டபாணி (44), ஆவடி டேக்ங் பேக்டரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றுகிறார். இவருக்கு மனைவி மற்றும் 2 ஆண் மற்றும் 13 வயதில் பிரதிக்ஷா என்ற மகள் உள்ளார்.

பிரதிக்ஷாவுக்கு 3 வயது இருக்கும்போது திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து, அவர் எழும்பூர் குழந்தைகள் நல அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேல் சிகிச்சைக்காக ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு சிறுமியின் காலின் பாதம் அறுவை சிகிச்சை மூலம் அகற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டது. மருத்துவர்களின் தவறான சிகிச்சையே மகளுக்கு கால் பறிபோகக் காரணம் எனக் கூறி, நீதி கேட்டு 5 ஆண்டுகளாக தலைமைக் காவலர் தொடர்ந்து போராடி வருகிறார்.

மருத்துவத் துறை அலுவலகம், டிஜிபி அலுவலகம், தலைமைச் செயலகம் எனப் பல இடங்களில் முறையிட்டும் அவரது கோரிக்கை இதுவரை நிறைவேறவில்லை. இந்நிலையில், மகளுக்கு நீதி கேட்டு, சீருடையில் தலைமைச் செயலக நுழைவு வாயிலுக்கு நேற்று வந்த கோதண்டபாணி, திமுக கொடியை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

மேலும், 2021-ம் ஆண்டு திமுக ஆட்சிக் காலத்தில்தான் தனது மகளுக்கு தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதாகக் கூறிய, மகளுக்கு நீதி கேட்டு கோஷமிட்டார். அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த போலீசார் உடனடியாக தீயை அணைத்து கோதண்டபாணியை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

முன்னதாக, தலைமைக் காவலர் கோதண்டபாணி கூறுகையில், “மகள் பிரதிக்ஷாவுக்கு 3 வயது இருக்கும் போது சிறுநீர் கழிப்பதில் பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து, எழும்பூர் குழந்தைகள் நல அரசு மருத்துவமனையில் காண்பித்தேன்.

அப்போது, காலில் அரிப்பும் ஏற்படத் தொடங்கியது. இது சாதாரண அரிப்புதான் எனக் கூறி அலட்சியமாக சில மருந்துகளைக் கொடுத்து அனுப்பி வைத்தனர். பின்னர், 2 நாளில் மீண்டும் காலில் அரிப்பு அதிகரித்தது.

வலது காலில் ரத்த ஓட்டம் சரியாக இல்லை என கூறினர். இறுதியில் அவர்கள் அளித்த தவறான சிகிச்சையால் மகளின் கால்பாதத்தை அகற்றும் நிலை ஏற்பட்டது. எனவே, இதில் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் உட்பட அனைவர் மீதும் நடவடிக்கை எடுத்து எனது மகளுக்கு உரிய நீதி வழங்க வேண்டும்” என்றார்.

# காலணிகள், தோல் பொருட்கள் உற்பத்தியில் நாட்டிலேயே முதலிடம்: தமிழக அரசு பெருமிதம்



**சென்னை, ஏப்.11:** இந்தியாவில் காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இந்தியாவின் காலணி மற்றும் தோல் பொருள்கள் உற்பத்தியின் தலைமையிடமாகத் தமிழகம் திகழ்கிறது.

இந்தியாவின் மொத்த தோல் ஏற்றுமதியில் 47 சதவீதமும், காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் 38 சதவீதமும் தமிழகம் மட்டுமே பங்களிப்பது பெருமைக்குரிய சாதனையாகும்.

இந்தத் துறையில் 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பணிபுரிந்து வருகின்றனர். தோல் பொருள்கள் ஏற்றுமதி மூலம் 1.25 பில்லியன் டாலர் மதிப்புள்ள வருவாயை ஈட்டுவதன் மூலம் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு, குறிப்பிடத்தக்க மிகப்பெரிய பங்களிப்பை அளிக்கிறது.

உலகளாவிய பிராண்டுகள் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்த்து, குறிப்பாக, பெண்கள் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான கொள்கைகளை வகுத்துச் செயல்படுவது, உள்ளடக்கிய மற்றும் நிலைத்தன்மையுள்ள வளர்ச்சியைத் தமிழகம் உறுதிப்படுத்தியுள்ளது என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்குப்பதிவு நாளில் விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் மீது புகார் தெரிவிக்கலாம்- தொழிலக பாதுகாப்பு அதிகாரி தகவல்

**சென்னை, ஏப்.11:** தமிழக சட்டசபை தேர்தல் வருகிற 23-ந்தேதி நடக்கிறது. வாக்குப்பதிவு நாளில் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தினக்கூலி, தற்காலிக பணியாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்களுக்கு வாக்களிக்க ஏதுவாக அன்றைய தினம் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

எனவே அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் வருகிற 23-ந்தேதி அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும். விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி விடுமுறை அளிக்க தவறும் நிறுவனங்கள் மீது புகார் அளிக்க ஏதுவாக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கம் சார்பில் மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

புகார் தெரிவிக்க கட்டுப்பாட்டு அலுவலர்களான திருவொற்றியூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குனர் கார்த்திகேயனை 94442 21011, சென்னை இணை இயக்குனர் கமலக்கண்ணனை 98846 75712, சென்னை நிர்வாக அலுவலர் சூரியாவை 98844 70526, காஞ்சீபுரம் துணை இயக்குனர் மணிசங்கரை 99404 68249 ஆகிய செல்போன் எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

தகவலை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குனர் ஆனந்த் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# ‘துரந்தர் 2’ படத்துக்கு தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுப்பு



**சென்னை, ஏப்.11:** ‘துரந்தர் 2’ திரைப்படத்துக்கு தடைவிதிக்கசென்னை உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

பாலிவுட் சினிமாவின் முன்னணி ஹீரோவான ரன்வீர் சிங் நடிப்பில் பிரம்மாண்டமான பொருட்செலவில் உருவாகி வெளிவந்துள்ள திரைப்படம் ‘துரந்தர் 2’. இத்திரைப்படம் கடந்த மாதம் 19-ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. இந்நிலையில், இத்திரைப்படத்தை தமிழக திரையரங்குகளில் நிறுத்தி வைக்க வேண்டும் என

மதுரையைச் சேர்ந்த டி. ராகேஷ் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். தேர்தல் நடத்தை விதிகள் கடந்த மார்ச் 15-ஆம் தேதி முதல் அமலில் உள்ள நிலையில், இப்படத்தில் அரசியல் தொடர்பாக ஒரு சார்பான கருத்துகள் இருப்பதால் ‘துரந்தர் 2’ திரைப்படத்தை தமிழக திரையரங்குகளில் தற்போதைய நிலையில் தடை விதிக்க வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தார்.

தேர்தலுக்கு பின் துரந்தர் 2 திரைப்படத்தை தமிழகத்தில் வெளியிட அனுமதிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மதாதிகாரி, நீதிபதி அருள் முருகன் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சார்பில், தமிழகத்திலும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான மத்திய அரசின் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு கொள்கைகளை இப்படம் பாராட்டும் வகையில் உள்ளதால் இத்திரைப்படத்தின் திரையிட்டிருப்பது, நடைமுறையில் உள்ள தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரானது என்று வாதிட்டிப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், மனுதாரர் ஆதாரமற்ற ஒரு குற்றச்சாட்டை முன்வைப்பதாகவும், திரைப்படத்தின் எந்தப் பகுதிகள் தேர்தல் நடத்தை விதிகளை மீறுகின்றன என்பதைக் குறிப்பிடவில்லை என தெரிவித்தனர்.

மத்திய திரைப்படச் சான்றிதழ் வாரியம் வழங்கிய சான்றிதழை மனுதாரர் எதிர்க்கவில்லை எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்தனர்.

# பாண்டியர் அருங்காட்சியகத் திட்டம் மறவர் படை திருவிதாங்கூர் ராணியாருடன் பாண்டியர்களை தேடி வரலாற்று ஆய்வு குழு சந்திப்பு



**நாகர்கோவில், ஏப்.11:** “பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு” சார்பில் தொடங்கப்பட உள்ள “பாண்டியர் அருங்காட்சியகம்” குறித்த பணிகள் தொடர்பாக, குழுவின் தலைமை ஆய்வாளர் சு. மணிகண்டன் அவர்கள், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ராணி பத்மஸ்ரீ அஸ்வதி திருநாள் கௌரி லட்சுமி பாய் அவர்களை திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள கௌடியர் அரண்மனையில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, ஆய்வு குழு சார்பில் பத்மநாபர் சுவாமி சிலை மற்றும் “மறவர் படை” சார்பில் அரச வாள் ஆகியவை ராணியாருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மேலும், பாண்டியர் அடையாளங்களான செங்கோல் மற்றும் மீன் சின்னம் ஆகியவற்றை திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயிலில் பூஜை செய்து, பின்னர் அரண்மனை பூஜை அறையில் வைத்து நமது குழுவிற்கு கொடுக்கப்படும் என ராணியார் தெரிவித்தார்.

இதனுடன், எதிர்காலத்தில் திருவனந்தபுரத்தில் நடைபெறும் முக்கியமான நான்கு திருவிழாக்களில் “மறவர் படை” கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டதோடு, பாண்டியர் வரலாற்றை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட உள்ள அருங்காட்சியகம் மற்றும் “மறவர் படை” வளர்ச்சி குறித்து பல்வேறு பயனுள்ள ஆலோசனைகளையும் ராணியார் வழங்கினார்.

இந்த சந்திப்பு, பாண்டியர் வரலாற்றை மறுவாழ்வு செய்யும் முயற்சியில் முக்கியமான கட்டமாகக் கருதப்படுகிறது.

தமிழகத்தையும், கேரளத்தையும் இணைக்கும் பண்பாட்டு பாலமாக இந்த அருங்காட்சியகம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கட்டிக்குளம் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் பூராடம் தின வழிபாடு பூஜை



**மானாமதுரை, ஏப்.11:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் சூட் டுக்கோல் மாயாண்டி சுவா மிகள் முதல் ஜீவ ஒடுக்கம் கோவில்உள்ளது. மாயண்டி சுவாமி தன் சீடர்க்கு 48 நாட் கள் தவமிருந்து தன்உள்ளங் கையில் காசி ராமேஸ்வரம் கோவில்களை தரிசிக்க வைத்த இடமாகும்.

தற்போது கருப்பனேந்தல் மடத்தில் சுவாமிகள் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்த விநாயகர் கோவில் கருங்கல் திருப்பணி முடிந்து அருகில் தண்டாயுதபாணி சுவாமி கோவில் கருங்கல் திருப்பணி நடைபெற்று வருகிறது.

இங்கு உள்ள தவசாலையில் மகா சித்தர் மாயாண்டி சுவாமி அவதார நட்சத்திரம் பங்குனி பூராடம் நட்சத்திரம் சிறப்பு பூஜை வழிபாடு அன்னதானம் நடைபெற்றது.

முன்னாதாக சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிக்கு பதினாறு வகையான மூலிகைகள் அபிஷேகம் நடைபெற்றது கட்டிக் குளம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை கட்டிக் குளம் கருப்பனேந்தல் மடம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி வழிபாட்டு குழுவினர் செய்து இருந்தனர்.

# பாலக்கோட்டில் வாசவி அம்மனுக்கு 1008 புஷ்பாபிஷேக சிறப்பு வழிபாடு



**தர்மபுரி, ஏப்.11:** பாலக்கோடு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மண்டல பூஜையை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பக்தி பாடல்கள் பாடி, 1008 புஷ்பாபிஷேகம், சகஸ்ர நாமாவளியும், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் புஷ்பாபிஷேக பூஜையில் கலந்து கொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.



## 50க்கும் மேற்பட்ட நபர்கள் மாற்று கட்சியினர் திமுகவில் இணையும் நிகழ்ச்சி

**திருவண்ணாமலை ஏப்.11:** கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியம் ராஜன் தாங்கள் ஊராட்சியை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட நபர்கள் மாற்று கட்சியினர் கீழ்பென்னாத்தூர் வெற்றி வேட்பாளர் மாண்புமிகு கு.பிச்சாண்டி அவர்கள் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்து கொண்டார்கள்.

# ராணிப்பேட்டை அருகே சிப்காட் ரசாயன தொழிற்சாலையில் தீ விபத்து!!



**வேலூர் ஏப்.11:** ராணிப்பேட்டை சிப்காட் பகுதியில் ரசாயன கழிவுகளை மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டது. தகவல் அறிந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுக்குள் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டுள்ளன.

## அரசியல் கார்னர்

# விஜய் பிரசாரத்தால் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரசாரத்திற்கு அனுமதி மறுப்பு



**சென்னை, ஏப்.11:** தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந் தேதி நடைபெற உள்ளது. வரும் 21ம் தேதி மாலை வரை மட்டுமே தேர்தல் பிரசாரம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்படி திமுக தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் காலை, மாலை என பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். அதேபோல் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் தினமும் பல தொகுதிகளில் வாகன பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

மேலும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தவெக தலைவர் விஜய், துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் பல்வேறு பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வாக்கு சேகரித்து வருகின்றனர்.

இந்த நிலையில், கடலூரில் நாளை விஜய் பிரசாரம் செய்ய உள்ள நிலையில், துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் நாளைய பிரசாரத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தேர்தல் விதிமுறைகளின்படி முதலில் யார் விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விஜய் முதலில் அனுமதி கேட்டு விண்ணப்பித்திருந்தால் அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திட்டக்குடி, நெய்வேலி, வடலூரில் நாளை பிரசாரம் செய்ய உதயநிதி ஸ்டாலின் அனுமதி கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. உதயநிதி ஸ்டாலின் பிரசாரம் வேறொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# மாம்பழம் சின்னத்தை முடக்கக் கோரிய ராமதாஸ் மனுவை தள்ளுபடி செய்தது சென்னை ஐகோர்ட்



**சென்னை, ஏப்.11:** சென்னை ஐகோர்ட்டில், டாக்டர் ராமதாஸ் தொடர்ந்த வழக்கில், “தமிழக சட்டசபை தேர்தலில் அன்புமணி ராமதாஸ் தரப்புக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கக்கூடாது. மாம்பழம் சின்னத்தை முடக்க வேண்டும்” என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு ஐகோர்ட்டு நீதிபதி டி.வி. தமிழ்செல்வி முன்பு நேற்று மாலை அவசர வழக்காக விசாரணைக்கு வந்தது.அப்போது டாக்டர் ராமதாஸ் தரப்பில், “அன்புமணி, கட்சிக்கு விரோதமாக செயல்பட்டதால் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு விட்டார். எனவே, இருதரப்புக்கும் மாம்பழம் சின்னம் வேண்டாம்.

அந்தச் சின்னத்தை முடக்கி விடவேண்டும். பொதுவான சின்னத்தைக் கொண்டு தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். ஆனால், அன்புமணி தரப்புக்கு மாம்பழம் சின்னத்தை ஒதுக்கத் தேர்தல் கமிஷன் முயற்சிக்கிறது. அதனால் சின்னத்தை முடக்க வேண்டும்” என்று வாதிடப்பட்டது. நீதிமன்றத்தின் கேள்விகள்அதற்கு நீதிபதி, “பா.ம.க.வின் தேர்தல் சின்னம் மாம்பழம் என்று வாக்காளர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்போது அந்தச் சின்னத்தை முடக்குவதால், பா.ம.க.விற்குத்தான் பாதிப்பு.

தேர்தலுக்குச் சில நாட்கள் தான் உள்ளது. தேர்தல் கமிஷன் தரும் புதிய சின்னத்தை எப்படி வாக்காளர்கள் மத்தியில் பிரபலப்படுத்துவீர்கள்? சின்னத்தை முடக்குவதால் யாருக்கு என்ன லாபம்?” என்று சரமாரியாகக் கேள்வி எழுப்பினார்.”

அதற்கு டாக்டர் ராமதாஸ் தரப்பில், “அன்புமணி தரப்பினர் 18 தொகுதிகளில் மட்டுமே போட்டியிடுகின்றனர். பிற தொகுதிகளில் போட்டியிடும் எங்கள் தரப்பு வேட்பாளர்களுக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கீடு செய்வதற்கு அன்புமணி தரப்பு எதிர்ப்பு தெரிவிக்கக்கூடாது” என்று கோரிக்கை வைக்கப்பட்டது. இதற்கு அன்புமணி தரப்பின் கருத்தைக் கேட்டுத் தெரிவிக்கும்படி அவரது வக்கீலுக்கு நீதிபதி உத்தரவிட்டார். தேர்தல் கமிஷன் மற்றும் அன்புமணி தரப்பு விளக்கம்தேர்தல் கமிஷன் தரப்பில் ஆஜரான வக்கீல், “பா.ம.க., அங்கீகரிக்கப்பட்ட கட்சி கிடையாது.

ஏற்கனவே பெற்ற அங்கீகாரத்தை இழந்துவிட்டது. எனவே, தற்போது பதிவு செய்யப்பட்ட கட்சியாக உள்ளது. மாம்பழம் சின்னம் பொதுச் சின்னமாகும். அந்தச் சின்னத்தை முடக்க வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் இதுபோன்ற வழக்கு தொடர முடியாது.

தற்போதுள்ள நிலையில், இந்த ஐகோர்ட்டும் சின்னம் தொடர்பாக எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது” என்று வாதிட்டார்.பா.ம.க. தலைவர் அன்புமணி தரப்பில், “தமிழ்நாட்டில் எல்லா தொகுதிகளிலும் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு, பரிசீலனை முடிந்துவிட்டது. வேட்புமனுவை வாபஸ் பெறும் காலமும் முடிந்துவிட்டது. இனி ராமதாஸ் வேண்டுமென்றால் தேர்தல் வழக்கு தொடர்ந்து கொள்ளலாம்” என்று வாதிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து இந்த வழக்கை இன்று விசாரிப்பதாக நீதிபதி கூறியிருந்தார். இந்த நிலையில், மாம்பழம் சின்னத்தை முடக்க கோரிய ராமதாஸ் மனுவை சென்னை ஐகோர்ட் தள்ளுபடி செய்துள்ளது. ஏற்கனவே வேட்பாளர் பட்டியல், இறுதிப்பட்டியல் வெளியாகியுள்ள நிலையில், மனு

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: PAPERBOYNEWSPAPER@GMAIL.COM